1134

வருஷச் சந்தா ரூ. 1 8 0. ஸஞ்சிகை [10

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)



OFFICE OF THE REGISTRAR
8 - DEC 1937
MADRAS

பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
(ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
...தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்
பிரசுரம் செய்யப்படுவது
...1937-வரு அக்டோபர்-மீ [ஐப்பசி-மீ

JL
இ2022/1, N3555
N37·3·10.
189910.

விஷயம்.

1. குறிப்புகள் 1—4
2. ஸுபாஷிதநீவீ [தொடர்ச்சி] 113—144

ஜீவித சந்தாதாரர்.

ஸ்ரீதேசிகஸ்ரீஸூக்திஸம்ரக்ஷிணியின் அபிவ்ருத்தியை உத்தேசித்து நம் ஸம்ரக்ஷிணியின் 3வது ஸம்புடம் 8வது (ஆவணி௴) ஸஞ்சிகையில் ராப்பர் 2-ம் பக்கத்தின் அறிவிப்பின்படி சென்ற வருஷத்தில் ஸ்ரீகோதாஸ்துதியின் உரை அச்சிடுவதற்கு ரூ. 25 தந்துதவிய தேரழுந்தூர் ஸ்ரீமான், T. R. ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி பின்னும் ரூபா 25- பொருளுதவி செய்திருக்கிறார் ஆக ரூபா 50- ஷ்யாரிடமிருந்து நம் ஸபைக்குக் கிடைத்திருப்பதால் ஜீவிதசந்தாதாரராகப் பாவிக்கப்படுகிறார். மற்றும் ப்ரமுகர்கள் ஜீவிதசந்தாதாரராக வேண்டுமென வேண்டுகிறோம். ப. ஸ்ரீ.

ஓர் வேண்டுகோள்— இவ்வருஷம் முடிவடைய இன்னும் இரண்டே மாஸங்கள் உள. இன்னும் சில அங்கத்தினர்கள் தங்களுடைய சந்தாத்தொகையைச் செலுத்தவில்லை. இவர்கள் உடனே தங்கள் பாக்கிகளை 'ஸம்ரக்ஷிணீ'யின் தலைமை ஆபீஸுக்காவது சென்னை காரியாலயத்துக்காவது அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் சந்தாக்களுடன் புதிய அங்கத்தினர்களைச் சேர்த்து அவர்களுடைய சந்தாக்களையும் அனுப்புவரேல் அது இவர்கள் ஸம்ரக்ஷிணீக்குச் செய்யும் ஓர் பேருதவியாகும்.

விளம்பரம்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள புஸ்தகங்கள் ஸம்ரக்ஷிணி சென்னை காரியாலயத்தில் கிடைக்கும்.

திருவாய்மொழி (மூலம் பாக்கெட் ஸைஸ்) விலை ரூ. 0—6—0
நமது சந்தாதாரர்களுக்கு 0—5—0

பாசுரப்படி ராமாயணம்
(திவ்யப்ரபந்தப் பாசுரப்படி ராமாயணம்—
ஸ்ரீபெரிய வாச்சான்பிள்ளை அருளிச்செய்தது). 0—0—6

திருமங்கையாழ்வார் அருளிய திருக்குறுந்தாண்டகம்,
திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, மூலம். 0—1—0

வெளியூர் மெம்பர்கள் புஸ்தகங்களின் விலையையும் தபால் விலையையும் சேர்த்து தபால் பில்லைகளாக முன்னால் அனுப்பினால் மாத்திரம் புஸ்தகங்கள் அனுப்பப்படும்.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ.

(ஓர் மாதப்பத்திரிகை)

ஸம்புடம் 3 } ஈச்வர-௵ ஐப்பசி-௴ { ஸஞ்சிகை 10

ஜீவனம் ஜகதாம் ஜீயாத் ஶ்ரீதேவ்யுபகதஸ்ப்ருஹம் ।
ஸூக்தம் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய வேங்கடேஶார்யஸம் ஸதாம்॥

குறிப்புகள்

துலாமாஸமும் காவேரிஸ்நானமும்.

அற்பிசி-௴ பிறந்தது. இதுவும் ஓர் விசேஷ மாஸமாகும். இதற்கு வடமொழியில் துலாமாஸம் என்று பெயர். இந்த மாஸத்தில் காவேரி நதியில் ஸ்நானம் செய்தால் கங்கையில் ஸ்நானம் செய்த பலன் உண்டு என்று சிலர் சொல்வார்கள். கங்காஸ்நானத்தைக்காட்டிலும் அதிக பலன் உண்டு என்பதே எமது அபிப்பிராயம். கங்கையோர் புண்யநதி. இந்த நதி பாய்வதாலேயே "ஆர்யாவர்த்த: புண்யபூமி: மத்யம் விந்த்யஹிமாலயோ:" என்ற ஆர்யாவர்த்தம் என்னும் ப்ரதேசம் புண்யபூமியாகியது. கங்கையின் பெருமைக்குக்காரணம் இது பகவானுடைய திருவடியில் நின்றும் பிரவஹித்தது என்பதே. பகவான் த்ரிவிக்ரமனாக வளர்ந்தபோது,

"ஒண்மிதியில் புனலுருவி யொருகால் நிற்ப
ஒருகாலுங் காமருசீரவுண னுள்ளத்
தெண்மதியுங் கடந் தண்டமீது போகி
இருவிசும் பினூடு போயெழுந்து மேலைத்

189910

[illegible]தியங் கதிரவனும் தவிரவோடித்
[illegible]கையின் புறந்தடவி யப்பால் மிக்கு
மண்முழுது மகப்படுத்து நின்ற"போது,

இவருடைய மலர்புரையுந் திருவடியை வணங்கிய பிரமன், இத்திருவடியைத்தன் கமண்டலத்து நீரால் விளக்கஞ்செய்ய இத்திருவடி தீர்த்தம் கங்காநதியாகப் பிரவஹித்தது.

கங்கை இத்தகைய சிறப்புப்பெற்றிருந்தும் இதற்குத் தேவதாந்தரங்களின் ஸம்பந்தம் உண்டு என்னும் குறையும் ஒன்று உண்டு. இதற்குத் திருமாலின் திருவடியின் ஸம்பந்தம் ஒரு தடவையே ஏற்பட்டது. தக்ஷிணகங்கை என்னும் பிரஸித்தியைப்பெற்றதும், பொன்னைத்தன் கரைகளில் ஒதுக்குவதாலேயே 'பொன்னி' என்னும் அஸாதாரணமான பெயரைப்பெற்றதுமான காவேரியாறே இத்தகைய குற்றமேதும் இல்லாது, திருவரங்கப்பெருநகருள் பள்ளிகொண்டிருக்கும் பணியரங்கப்பெரும் பாயல் பரஞ்சுடரைத் தனது அலைக்கையால் தினமும் அடிவருடிச்செல்வதாலேயே "கங்கையிற்புனிதமாய காவிரி" யாகியது. இதில் இத்துலாமாதத்தில் ஸ்நானஞ்செய்பவருக்கு விசேஷ பலன் உண்டு என்பதில் ஆச்சரியம் என்ன ?

திருக்குருகைப்பிரான் பிள்ளான் அவதாரதினம்.— அற்பிசி 23௳ இந்த மாஸத்தில் நமக்குக் கொண்டாடக் கொடுத்துவைத்திருக்கும் விசேஷ தினங்களுள் மிகவும் முக்கியமானது திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய அவதாரதினமாகும்.

பகவான் ஜீவராசிகளுக்குச்செய்தவுபகாரம் அவர் இவர்களுக்கு வேதங்களாகிற கைவிளக்கைத்தந்ததேயாகும். இவ்வேதங்களின் ஸாரத்தை தமிழ்ப்பிரபந்தங்களாகச் செய்தருளி வேதந் தமிழ் செய்த மாறனார் நம்மாழ்வார். காலவைஷம்யத்தால் மறைந்துபோன இப்பிரபந்தங்களை மறுபடியும் ஆழ்வாரிடம் உபதேசபுரஸ்ஸரமாகப்பெற்று பிரவர்த்திப்பித்தார் ஸ்ரீமந் நாதமுனிகள். இவற்றுள் பிரதானமாகிய திருவாய்மொழிக்கு பகவத்விஷயம் என்று கொண்டாடப்படும் ஆறாயிரப்படி வ்யாக்யானத்தைச் செய்தருளி நமக்குத் தந்தவர் ஸ்ரீபாஷ்யகாரருக்கு ஞான புத்ரரும் அத்யந்தம் பிரியதம சிஷ்யரும் எழுபத்துநான்கு ஸிம்மாஸநாதிபதிகளுள் முதல்வரும் ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயமாகிய

உபயவேதாந்தங்களிலும் ஸிம்மாஸநாதிபத்யத்தை ஸ்ரீபாஷ்யகாரரால் ப்ரஸாதிக்கப்பட்ட ஒப்பற்ற பெருமையுள்ளவருமான திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்னும் ஆசார்யவர்யர். இவருடைய சரித்ரமும் ஸ்ரீதேசிகனுடைய திவ்யசரித்ரத்தைப்போலவே அத்யாச்சர்யமானது. ஸ்ரீதேசிகனுக்கும் இவருக்கும் பல அம்சங்களில் ஸாம்யமும் தோற்றுகின்றது.

ஸ்ரீதேசிகன் திருமலையப்பனுடைய அனுக்ரஹத்தால் தூப்புலில் வந்தவதரித்தார். இவர் திருமலையிலேயே அவதரித்தார். ஸ்ரீதேசிகன் கண்டாம்சபூதர். இவர் ப்ரசண்டாம்சபூதர். இருவருடைய ஆஜான ஸித்தங்களான ஸத்வ்ருத்தங்களும் ப்ரஸித்தம். ஒரே வேதாந்தத்தில் வைதக்யமுள்ள பூர்வாசார்யர்கள் போலின்றி இருவரும் உபயவேதாந்தங்களிலும் ஒப்பற்றவைதக்யமுள்ளவர்கள். இருவரும் திருவாய்மொழிக்கு வ்யாக்யானமிட்டார்கள். ஒருவர் செய்த வ்யாக்யானம் 'பகவத்விஷயம்'. மற்றவருடையது 'நிகமபரிமளம்'. இவ்வாறு திவ்யப்பிரபந்தங்களுடைய ஏற்றங்களை உலகுக்கு எடுத்துக்காட்டியதில் ஒருவருக்கு மற்றவர் இளைத்தவரல்லராயினர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய மனம் பால்யத்திலேயே அருளிச்செயலில் ஈடுபட்டது. பருவம்நிரம்பாத பால்யத்திலேயே பகவானுடைய குணங்களில் ஈடுபட்ட ஸ்ரீஆண்டாளும் "முற்றிலாத பிள்ளைகளோம் முலை போந்திலோமை", "முற்றத்தூடு புகுந்து நின்முகங்காட்டி பின் முறுவல் செய்து சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக்கடவையோ? கோவிந்தா!' என்று அருளிச்செய்ததால் பகவத்குணங்கள் மனதைக்கவர வயது ஓர் பிரதிபந்தகம் இல்லைபோலும்.

இவர் ஸ்ரீபாஷ்யகாரரையாச்ரயித்து ரஹஸ்யார்த்தங்கள் கேட்டுவரும்நாளில் ஒரு நாள் ஸ்ரீபாஷ்யகாரர் தமது மடத்தில் திவ்ய ப்ரபந்தார்த்தங்களை மனனஞ்செய்துகொண்டு அபிநயக்ரமமாக உலாத்திக்கொண்டிருக்கையில் வெளியில் இருந்த பிள்ளான் வாசல் திறவுகோலின் துவாரத்தின் வழியே பார்த்து, இப்போது 'திருமாலிருஞ்சோலை மலையென்றேன் என்ன' என்னும் திருவாய்மொழியநுஸந்தானமோ ? என்று விண்ணப்பஞ்செய்ய, அதே திருவாய்மொழியையநுஸந்தித்துக்கொண்டிருந்த ஸ்ரீபாஷ்யகாரரும் இதைக்கேட்டு விஸ்மயாவிஷ்டஹ்ருதயராய் கதவைத்திறந்து

பிள்ளானை வாரியணைந்து உச்சி மோந்து, பின் பெரிய நம்பி முதலியோர் நிறைந்த பெருங்கூட்டத்தில் இந்த ஆச்சரியத்தை எடுத்துச்சொல்லி, பிள்ளானைத் தம் ஞானபுத்ரராகவும் ஸ்வீகரித்தருளினார். இவருக்குத் திருக்குருகைப்பிரான்பிள்ளான் என்று திருநாமமிட்டதும் ஸ்ரீபாஷ்யகாரர் தான்.

தமது ஆசார்யநியமனத்தைத் தலைக்கட்ட விரும்பி இவர் செய்தருளிய 'பகவத் விஷய'த்தின் பெருமையை நாடுநகரமும் நன்கறியும்.

ஸவஹுஷெஸஷஸாகாஷெஷவ்ராஹத வராகஹீா ।
ராமா நுஜாயஹ் ஷிவ்ராஜ்ஞா வஸஹதாஹிவஸஹதாஹ ॥

என்று மங்களம் பாடியவரும் ப்ரபந்தானுஸந்தானத்தின் உபக்ரமத்தில் அநுஸந்திக்க ஆழ்வார்கள் விஷயமான 'ஹாஹிதம் ஸாஹு' என்னும் ச்லோகத்தையும், ஸ்ரீபாஷ்யகாரர் விஷயமான 'யொநித்யஹெவ்ஹத' என்னும் ச்லோகத்தையும் செய்தருளி இவற்றுக்கு ஸ்ரீபாஷ்யகாரருடைய அநுமோதத்தைப் பெற்றவரும் இவரேதான். ஸ்ரீயதிவரனர் தம்முடைய ஸமான காலத்தவர்களால் மாத்திரம் ஸேவிக்கப்படுவது போதாது, இவர் பின்னுளோர் வணங்குஞ்சோதியாய் இருக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி அவருடைய திவ்யமங்கள விக்ரஹங்கள் மூன்று ஏறியருளப்பண்ணுமாறு பிரார்த்தித்ததும், இவற்றுள் தமக்குக் கிடைத்த விக்ரஹத்தைத் திருவரங்கம் பெரியகோவிலில் ப்ரதிஷ்டை செய்ததும் இவரே.

முதலாழ்வார்கள் அவதாரதினங்கள்—அற்பிசி-மீ 25, 26, 27உ "கரும்பினின் சாறுபோலப் பருகினேற் கினியவாறே" என்பது பகவதனுபவத்தின் ரஸம். இந்த ரஸத்தைப் பெருக்குபவர்கள் ஆழ்வார்கள். இவ்வாழ்வார்களிலும் முதலாவார் மூவராவர். இவர்கள் முறையே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னப்படுவார்கள். இவர்கள் முதலாழ்வார்களானது மற்றைய ஆழ்வார்களுக்கு முந்தியே அவதாரம் செய்த பெருமையாலாகும் என்பார்கள். இது உண்மையே; ஆயினும் பிறப்பினை மாத்திரம் கொண்டு ஏற்றத்தாழ்வை அளவிடவியலாது. இவர்களைப் புலவர் புகழ்க்கோலால் தூக்கிப்பார்ப்பினும் இவர்கள் முதலாழ்வார்களேயாகிறார்கள்.

ஙாஹதி ஸஹவக்ஷதாம் கிரியஹரஹொ யீரதாஹ
உதஙதி ஙஹீரதாஹெஹதீயிதள ஸளஹெதாஹ ।
விவஹதி வ தீஹதாம் வியிரஹவாஷயாநஹிரா
ஷநவஹஙஹணவிகிதம் கிஹெவி விகாஸஹிகயஷ ॥

கருத்மதி ஸுபக்ஷதாம் கிரிதுரந்தரே தீரதாம்
உதந்வதி கபீரதாம் அம்ருததீதிதௌ ஸௌம்யதாம் ।
விவஸ்வதி ச தீப்ததாம் விதிருபாததாஞ்சிரா
தநர்க்ககுணசித்ரிதம் கிமபி சித்ரமாஸூத்ரயத் ॥

(ப-ரை) ஙாஹதி [கருத்மதி] - அழகிய பக்ஷங்களை உடைய ஸுபர்ணனிடத்தில், ஸஹவக்ஷதாம [ஸுபக்ஷதாம்] - நற்பக்ஷமுடைமையையும், கிரியஹரஹொ [கிரிதுரந்தரே] - உயர்ந்த மலையில், (ஹிமயமலையில்), யீரதாம [தீரதாம்] - தீரத்தன்மையையும், உதஙதி [உதந்வதி] - ஸமுத்ரத்தில், ஙஹீரதாம [கபீரதாம்] - காம்பீர்யத்தையும், அஹெதீயிதள [அம்ருததீதிதௌ] - அம்ருதகிரணமுடைய சந்த்ரனிடம், ஸௌஹெதாம [ஸௌம்யதாம்] - ப்ரியமான ஆகாரத்தையும், விவஹதி [விவஸ்வதி] - ஸூர்யனிடம், தீஹதாம வ [தீப்ததாம்ச]-ப்ரகாசத்தையும, உவாஷயாநஃ [உபாததாநஃ] - வைத்து அமைத்துப்பழகி வந்த, வியிஃ [விதிஃ] - ஸ்ருஷ்டிகர்த்தா, கிராக [சிராத்] - வெகு காலத்திற்குப் பிறகு, அநவஹஙஹணவிகிதம [அநர்க்ககுணசித்ரிதம்] - விலைபற்ற குணங்களால் விசித்ரமாயலங்கரிக்கப்பட்ட, கிஹெவி [கிமபி] - வர்ணனைக்கு அடங்காத ஓர், விகாம [சித்ரம்] - ஆச்சர்யத்தை, (ஸஜ்ஜனபுருஷனை), ஆஸஹிகயக [ஆஸூத்ரயத்] - அமைப்பு செய்தார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— முன் ச்லோகங்களில் ஒன்றொன்றை உபமானமாகக் காட்டினார். இங்கே, ஓர் ஸஜ்ஜனத்திடமுள்ள பல குணங்கள் பற்பல ச்ரேஷ்டப்பொருள்களில் ஒன்றொன்று மட்டுமிருக்கும்; சேர்ந்திராது; பற்பல வஸ்துக்களில் ஓரோர் குணத்தை ஸ்ருஷ்டித்து, அதில் நன்றாக வெகுகாலம் பயிர்ச்சி செய்து, பழகித தேறி, ஸ்ருஷ்டிகர்த்தா பிறகு எல்லாத்தையும் சேர்த்து அமைத்து ஓர் ஸஜ்ஜனத்தை ஸ்ருஷ்டிக்கிறார்

என்கிறார். 'ஸ மஹாத்மா ஸுதுர்லப:' என்று பெருமாளுக்கும் அகப்படாத வஸ்து. "ஸோமனைப்போல ப்ரியதர்சனர்; ஸமுத்ரத்தைப்போல காம்பீர்யமுடையவர்; ஹிமவானைப்போல தைர்யமுடையவர்" என்று ருஷி ராமனை வர்ணித்தார். சேஷனை முன்பு பேசினார். இங்கே கருடனைப் பேசுகிறார். வேதாந்தத்தில் ஸத்பக்ஷத்தைக்கொள்ளவேணும். 'கருத்மான்' என்று இரண்டு பக்ஷங்களையுடைய பக்ஷியைச் சொல்லாம். ஜ்ஞானம், கர்மம் என்னும் இரண்டு பக்ஷங்களும் ப்ரஹ்மவித்துக்கு வேணும். 'கிரி' வாக்கில், (பேச்சில்) ஸத்பக்ஷத்தை நிர்வஹிக்க சக்தியுடையவர் மஹாபுருஷர். மலை சலித்தாலும் அவர்கள் சலிக்கமாட்டார். திலோத்தமைபோன்ற உயர்ந்த அழகுள்ள ஸ்த்ரீகளை ஸ்ருஷ்டிக்கும் விஷயத்தில் இப்படி எல்லாம் வர்ணிப்பதுண்டு. ரூபத்திலும் குணமே உயர்ந்தது குணத்தின் அழகே அழகு. 'கிரணங்களால் தீப்தனான ஸூர்யனைப்போல் ராமன் குணங்களால் ஜவலித்தார்'. ஜ்ஞானம் கர்மம் என்னும் இரண்டு பக்ஷங்களும் வேதமயமாயிருக்கவேணும். இவர்கள் குணங்களின் அமைப்பு ஸூத்ரங்கள்போல. செய்யும் கார்யங்கள் எத்தனையோ பாஷ்யமாக விரியும். பெருமை மேலுக்கு ஸூசனமாத்ரமாயிருக்கும். கார்யங்களால் உள்ளேயுள்ள மஹிமை நன்கு வெளிப்படும். சின்ன ஸூத்ரங்களில் எத்தனையோ பொருள் மஹிமை அடங்கியிருக்கும். (17)

ப்ரசஸ்திம் விந்தந்தி ப்ரசமஸுகதிவ்யாம்ருதஸரித்
ப்ரலீநா தந்யாநாம் பரிஷதி ந ஸம்பத்திஸரித: |
அமித்ரோபக்ஷேபக்ஷணவிகளதாத்மீயப்ருதநா
த்ருடாமர்தத்ரஸ்யத்த்ரமிடபடஜங்காஜவப்ருத: || ௭௨

ப்ரசஸ்திம் விந்தந்தி ப்ரசமஸுக திவ்யாம்ருதஸரித்
ப்ரலீநா தந்யாநாம் பரிஷதி ந ஸம்பத்திஸரித: |
அமித்ரோபக்ஷேபக்ஷணவிகளதாத்மீயப்ருதநா
த்ருடாமர்த த்ரஸ்யத் த்ரமிடபடஜங்காஜவப்ருத: || (72)

(ப-ரை) அமித்ரோபக்ஷேபக்ஷணவிகளதாத்மீயப்ருதநாத்ருடாமர்தத்ரஸ்யத்த்ரமிடபடஜங்காஜவப்ருத: [அமித்ரோபக்ஷேபக்ஷண விகளதாத்மீய ப்ருதனாத்ருடாமர்தத்ரஸ்யத் த்ரமிடபட

ஜங்காஜவப்ருத:] - சத்ருக்கள் எதிர்த்த க்ஷணத்திலேயே (சத்ருவென்னும் சப்தம் காதில் விழுந்த உடன்காலிலேயே,) ஓட்டம் பிடிக்கும், தங்கள் ஸைந்யத்தை த்ருடமாக விமர்த்தம் செய்வதைக் கண்டு பயந்து ஓட்டம் பிடிக்கும், தமிழ்ப் போர் வீரருடைய முழங்கால் வேகம்போன்ற வேகத்தோடு ஓடும், ஸம்பத்திஸரித: [ஸம்பத்திஸரித:] - செல்வஆறுகள், (ஸம்பத்தின் பெருக்குகள்,) ப்ரசமஸுகதிவ்யாம்ருதஸரித்ப்ரலீநா: [ப்ரசமஸுகதிவ்யாம்ருதஸரித்ப்ரலீனா:] - சாந்தியென்னும் திவ்யமான அம்ருதநதிவெள்ளத்தில் அடியோடு ஒடுங்கி இருக்கிற இடம் தெரியாமல் மறைந்துபோய், தந்யாநாம் [தந்யானாம்] - க்ருதார்த்தரான மஹாபுருஷருடைய, பரிஷதி [பரிஷதி] - ஸதஸ்ஸில், ப்ரசஸ்திம் [ப்ரசஸ்திம்] - ச்லாகையை, ந விந்தந்தி [ந விந்தந்தி] - பெறமாட்டா.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— 'நிஷ்கிஞ்சனஜனருக்கு நான் ப்ரியன்' என்றார் கண்ணன். 'எனக்கு ஒன்றுமில்லை என்ற எண்ணமுடைய என்னுடைய வித்தம் அனந்தம்' என்றார் ஜனகமஹாராஜர். பணம் நிரம்பியிருந்தாலும், பணத்தில் ஆசை வைக்கமாட்டார். பணமில்லாமற்போனால், பணத்தைக் கோரமாட்டார். பணத்தினால் அம்ருதத்வம் என்னும் மோக்ஷம் கிடையாதென்றார் யாஜ்ஞவல்க்யர். உலகமெல்லாம் தங்கமாய் நிரம்பி, அத்தனை தனமிருக்கும் ஆசிரியனுக்கு மானுஷானந்தத்தில் உயர்ந்த ஆனந்தம் உண்டென்று பேசிய வேதம் காமத்தைத் துறந்த ப்ரஹ்மவித்தின் ஆனந்தம் ப்ரஹ்மானந்தத்தைப் போன்றதென்றது, மானுஷானந்தம் அதில் கோடி கோடி அம்சமும் ஆகாதென்றது. 'த்ருஷ்ணாக்ஷயம்' (ஆசையடக்கம்) என்ற ஸுகம்தான் உயர்ந்தது. 'ப்ரசமஸுகம்' என்பது சாந்திஸுகம். 'சாந்தனுக்கல்லால் ஸுகமேது' என்றார் கண்ணன். அகாமஹதனை ச்ரோத்ரியனுடைய சாந்திஸுகத்தில் மற்ற ஸுகமெல்லாம் ஒடுங்கிவிடும். சாந்திப்பெருக்கு கங்காப்ரவாஹம் போன்றது. அது சுத்தி, குளிர்ச்சி, அம்ருதம்போன்ற இநப்பு இவற்றையுடையது; துக்கலேசமற்றது. அந்த ஸுகத்தை அநுபவிப்பவர் பணத்தை மதியார். பணமிருந்தாலும் இல்லாவிடினுமதை மதியார். செல்வம் என்பது அதிவேகமாய் ஓட்டம் பிடிக்கும்.

ஸம்பத் ப்ரவாஹங்கள் வருகையிலேயே ஓடிக்கொண்டேயிருக்கும். சாந்திஸுகப் பெருக்கு அவிச்சின்னமாய் ஸ்திரமாயிருக்கும். மேலும் மேலும் வ்ருத்தியை யடையும். தமிழ்நாட்டு ஸேனைபடர்களின் ஓட்டத்தை ஸ்வாமி நேரில் நன்கு அநுபவித்திருக்கவேணும், தெலுங்கர்களுக்குச் சிரிப்பு வரும்படி அழகாகக் காட்டுகிறார். தோராத தனிவீரனைப்பற்றி ருஷி வர்ணித்த தைர்யாதி குணங்களை முன் ச்லோகத்தில் காட்டிவிட்டு, இங்கே இந்த படர்களின் பயத்தை வேடிக்கையாய்க் காட்டுகிறார். இவர்கள்வெரும்பு ருஷர்களே (ஆண்பிள்ளைகளே) அல்லவென்று காட்டுகிறார். 'எதிரி' என்று ஒரு வாக்யம் தொடங்குகையில் அவரைப்பற்றி இன்ன சொல்லப்போகிறார் என்பதைக்கூடக் கேட்கக் காற்காமல் ஓடுகிற வீரர். பணத்தை மதியாத மஹாபுருஷ ச்ரேஷ்டரான ஜனகரையும், அகாமஹதச்ரோத்ரியர் என்று திரும்பித் திரும்ப உபநிஷத்துக் கொண்டாடும் முக்தர்போன்ற ப்ரஹ்மவித்தையும் ஸூசித்து இந்தப்பத்ததியை முடிக்கிறார். (72)

ஆறுவது மஹாபுருஷபத்ததி முற்றிற்று.

ஏழாவது ஸமசித்தபத்ததி.

𑌪𑌁𑌂𑌸𑌃 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌦𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌸𑍂𑌰𑌿𑌸𑍇𑌵𑌿𑌤𑍇 ।
𑌗𑍁𑌣𑌵𑌤𑍍𑌪𑌕𑍍𑌷𑌪𑌾𑌤𑍇𑌽𑌪𑌿 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌮𑌾𑌨𑌭𑍃𑌤𑍍 ॥௭௩॥

பும்ஸ: கஸ்யசிதாஸ்த்தாநே த்விஜேந்த்ரஸ்ஸூரிஸேவிதே ।
குணவத்பக்ஷபாதேZபி மத்யே திஷ்டதி மானப்ருத் ॥ (73)

(ப-ரை) 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 [கஸ்யசித்]-வர்ணனையிலடங்காத மஹிமையுடைய ஓர், 𑌪𑌁𑌂𑌸𑌃 [பும்ஸ:] - ப்ரபுவினுடைய, (ரங்கநாதனுடைய), 𑌸𑍂𑌰𑌿𑌸𑍇𑌵𑌿𑌤𑍇 [ஸூரிஸேவிதே] - நித்யஸூரிகளாலும், ப்ரஹ்மவித்தான பண்டிதராலும் ஆச்ரயிக்கப்பட்ட, 𑌆𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 [ஆஸ்த்தாநே] - ஸந்நிதியில் ஓலக்கத்தில், 𑌦𑍍𑌵𑌿𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 [த்விஜேந்த்ர:] - த்விஜச்ரேஷ்டரான ஸபாத்யக்ஷர், (பக்ஷிராஜன்,) 𑌗𑍁𑌣𑌵𑌤𑍍𑌪𑌕𑍍𑌷𑌪𑌾𑌤𑍇𑌽𑌪𑌿 [குணவத்பக்ஷபாதேZபி] - குணவான்களிடம் ப்ரியமாயிருந்தாலும், (உயர்ந்த

சிறகுகளை உடையவராய் பறக்கக்கூடியவராயினும்,) 𑌮𑌾𑌨𑌭𑍃𑌤𑍍 [மாநப்ருத்]-ப்ரமாணசரணராய், பூஜைகளைப்பெற்றுக்கொண்டு, 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 [மத்யே திஷ்டதி]-மத்யஸ்த்தராகப்பக்ஷபாதலேசமன்றியில் நிற்கிறார். (நடுவில் பறக்காமல் நிலையாய் நிற்கிறார்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ரங்காஸ்தானத்தில் வித்வத் ஸபைகள் கூடும். அங்கே சில ஸமயங்களில் ஸ்வாமியே அத்யக்ஷராக மாத்யஸ்த்யத்தை வஹிக்க நேரும். அந்த ஸமயங்களில் பக்ஷபாதலேசமன்னியில் மத்யஸ்தம் செய்யவேண்டும். தனக்கும் அபிமதமான கக்ஷியென்று அந்தக் கக்ஷிவாதியிடம் பக்ஷபாதம் வைக்கவே கூடாது. தனக்கு இஷ்டமல்லாத பக்ஷமாயினும், அதை வாதிக்கும் வாதியின் யுக்திகள் நன்றாயிருந்தால் அதைப் புகழவேணும். இருவர் பேசும் வாதங்களை மட்டும் சீர்தூக்கிப்பேசவேணும், அது மிகவும் கஷ்டம். தனக்கு அபிநிவேசமுள்ள பக்ஷத்தைச் சாராமல், நடுவு நிலையில் நிற்பது கஷ்டம். அது எத்தனை கஷ்டம் என்றால், கருடனைப் பறக்காமல் இங்கே நடுவில் ஸ்தாவரப்பிரதிஷ்டையாய் அசையாமல் நிற்கவேணுமென்று நிர்ப்பந்தத்திற்குட்படுத்துவது எத்தனை கடினமோ, அதுபோல என்று ஸூசிக்கிறார். மத்யஸ்த்கரை மேல் கோடி சொல்லச் சொன்னால் அவர் மேதை ஆகாயமளவும் பறந்து எதிர்வாதியை அடக்க ஸமர்த்தமாயிருக்கும். ஆயினும் தாம் வாயை மூடிக்கொண்டிருக்க வேணும். வேதம் யார் தன்னை எப்படிப் பொருள் கொண்டாலும், வாயைத் திறப்பதில்லை. எல்லா வேதாந்திகளும் வேதத்தைப் பூஜிக்கிறார்கள். எந்த வாதியிடமும் பூஜையைவாங்கிக்கொண்டு சும்மாயிருக்கிறது. தன் வாக்யங்களுக்குத் தப்பர்த்தம்செய்பவரிடமும்பயந்துகொண்டுமௌனமாயிருக்கும். பெருமாளுக்கும் வேதபுருஷனுக்கும் (கருடனுக்கும்) நடுவில் ரங்கஸபை. 'ஸமசித்தத்வம்' என்பது ஸுகதுக்கங்களையும், சத்ருமித்ரர்களையும் ஸமமாக பாவிப்பதைச் சொல்லும். "நித்யம் ச ஸமசித்தத்வம் இஷ்டாநிஷ்டோபபத்திஷு" 'ஸமத்வம் ப்ரஹ்ம', 'ஸமோஹம் ஸர்வபூதேஷு', 'ஸமத்வம் யோக உச்யதே' என்பது கீதை. இத்தனையைக் காட்டிலும், வாதத்தில் மத்யஸ்தருடைய ஸமத்வம் அரிதென்கிறார். பெருமாள் ஸேவாரஸத்தில் மூழ்கி பறப்பதையே மறந்து அசலராய் பூமியிலேயே ஸ்தாவர ப்ரதிஷ்டையாகவிருக்கிறார். (73)

𑌚𑌕𑍋𑌰𑌾𑌨𑌾𑌦𑌰𑌂 𑌦𑍇𑌵𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌵𑌾𑌕𑌸𑍍𑌯 𑌚𑌾𑌦𑌰𑌮𑍍 ।

𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌭𑌿𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍇𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌨𑍍 । ௭௪ ॥

சகோராநாதரம் தேவ: சக்ரவாகஸ்ய சாதரம் l

விவஸ்வாந் நாபிஸந்தத்தே விச்வமேதத் ப்ரகாசயந் ll (74)

(ப-ரை) 𑌦𑍇𑌵𑌃 [தேவ:] - தேவனுன, 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 [விவஸ்வாந்] - ஸூர்யன், (பகவான்,) 𑌏𑌤𑌤𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 [ஏதத் விச்வம்] - இந்த உலகத்தை, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌨𑍍 [ப்ரகாசயந்] - ப்ரகாசப்படுத்திக்கொண்டு, 𑌚𑌕𑍋𑌰𑌾𑌨𑌾𑌦𑌰𑌂 [சகோராநாதரம்] - சகோரபக்ஷியை அனுதரிக்கவும், 𑌚𑌕𑍍𑌰𑌵𑌾𑌕𑌸𑍍𑌯 𑌆𑌦𑌰𑌂 𑌚 [சக்ரவாகஸ்ய ஆதரம் ச] - சக்ரவாகபக்ஷியை ஆதரிக்கவும், 𑌨𑌾𑌭𑌿𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑍇 [நாபிஸந்தத்தே] - எண்ணுகிறதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஸாக்ஷிகளும், மத்யஸ்தரும் தாங்கள் பார்த்தும் கேட்டும் அறியும் விஷயங்களால் மனோவிகாரத்தை யடையாமலிருப்பர். சண்டைக்காரர் ஒருவரை ஒருவர் கோபித்தாலும், ஸாக்ஷிக்காரர் சித்தவிகாரமன்னியில் பார்த்திருப்பர். வாதத்தில் பக்ஷபாதமற்ற மத்யஸ்தரைப் பேசிய பிறகு, ஸூர்யன் முதலிய ஸாக்ஷிகளைப்பற்றிப் பேசுகிறார். தனக்கே வரும் ஸுகதுக்கங்களையும் ஸொந்த அக்கரை யில்லாத ஸாக்ஷிபோல நிர்விகாரனுகப் பார்க்கவேணும். ஈச்வரன் ஸர்வஸாக்ஷி. ஸூர்யன் முதலிய பதினைன்கு ஸாக்ஷிகளுக்கும் ஸாக்ஷி. அவர்களையும் ப்ரகாசப்படுத்திக்கொண்டு ஸாக்ஷியாயிருப்பவன். எல்லா ப்ராணிகளிடமும் ஈச்வரன் ஸமத்வஸ்வபாவமுடையவன். அவரவர்கள் வினையால் நலங்களையும் கேடுகளையும் தேடுகிறார்கள். ஈச்வரனைப் பழிக்கக்கூடாது. அதற்கு அழகாக ஸூர்யத்ருஷ்டாந்தத்தைக் காட்டுகிறார். ஸூர்யன் உலகத்தையெல்லாம் ப்ரகாசப்படுத்துகிறான். ‘ஆதித்தியனுடைய ஜ்யோதிஸ் எப்படி ஜகத்து முழுவதையும் ப்ரகாசப்படுத்துகிறதோ’ என்பது கீதை. ஸூர்யன் உலகத்தை இப்படி ப்ரகாசிப்பித்துக் கொண்டிருக்கையில், சக்ரவாகப் பக்ஷிகள் ஆண்பெண் ஜோடி சேர்ந்து இன்பமாயிருக்கின்றன; சகோரப்பக்ஷிகளுக்குச் சந்த்ரனிடம்தான் ப்ரியம்; பகலிலும் ஸூர்யனிடமும் அப்ரீதி செய்கின்றன. ஸூர்யன் சகோரங்களிடம் அப்ரீதியையாவது, சக்ரவாகங்களிடம் ப்ரீதியையாவது செய்பவேயில்லை. அவர்ஸமத்வத்தில் குறையில்லை.

அதது தன் தன் ப்ரக்ருதியை (ஸ்வபாவத்தை) அநுஸரிக்கிறது. ஸூர்யன் என்ன செய்வார்? ஈச்வரனிடமும் வைஷம்யமில்லை. ஈச்வரனுடைய தேஜஸால்தான் ஸூர்யன் முதலிய ஸகலப்ரபஞ்சமும் ப்ரகாசிக்கிறது. ஸூர்யனுடைய ஒளியும் ப்ரஹ்மத்தின் ஒளியிலிருந்து கிடைப்பதே. ஒரு பொருள் ஒருவருக்கு அநுகூலம்போலாவதற்கும், மற்றொருவருக்கு ப்ரதிகூலம்போலாவதற்கும் அவரவர் வினையெனும் அத்ருஷ்டமே காரணம். சகோரபக்ஷிக்கு அப்ரியமாகுமேயென்று ஜகதுபகாரமாக ப்ரகாசிக்கும் ஸூர்யன் ப்ரகாசிக்காமல் நின்றுவிடலாமா? லோகோபகாரிகள் தங்கள் உபகாரக்ருத்யத்தைச் செய்யவே வேணும். (74)

𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑌿𑌷𑌮𑌤𑍍𑌵𑌂 𑌸𑌮𑌤𑍍𑌵𑌵𑌤𑍍 ।

𑌨𑌿𑌶𑌾𑌦𑌿𑌵𑌸𑌯𑍋𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ॥

தேசகாலவிசேஷேண விஷமத்வம் ஸமத்வவத் l

நிசாதிவஸயோர் த்ருஷ்டம் அஹோராத்ரஸ்ய ந க்வசித் ll

(ப-ரை) 𑌨𑌿𑌶𑌾𑌦𑌿𑌵𑌸𑌯𑍋𑌃 [நிசாதிவஸயோ:] - இரவிற்கும், பகலுக்கும், 𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 [தேசகாலவிசேஷேண] - தேசகாலபேதங்களால், 𑌸𑌮𑌤𑍍𑌵𑌵𑌤𑍍 [ஸமத்வவத்] - ஸமமாய் (ஒரே ஸரியளவாய்) இருப்பதைப்போல, 𑌵𑌿𑌷𑌮𑌤𑍍𑌵𑌂 [விஷமத்வம்]-குறைதல் அதிகம் என்னும் விஷமத்தன்மையும், 𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 [த்ருஷ்டம்] - காணப்படுகிறது. ஆனால், 𑌅𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 [அஹோராத்ரஸ்ய] - இரவும் பகலும் சேர்ந்து உள்ளடங்கிய தினத்திற்கு, 𑌨 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 [ந க்வசித்]-ஓரிடத்திலும், (ஓர் காலத்திலும் (வைஷம்யம்)குறைவு ஆதிக்யம் காணப்படுகிறதில்லை,

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— தேசம், காலம் இவற்றின் வேறுபாடுகளால் 30-நாழிகையாக ஸமமாக இருக்கவேண்டிய பகலும் ராத்ரியும், நாழி குறைவதையும், ஏறுவதையும் காண்கிறோம். தேசகாலங்களால், பகலிரவுகளுக்கு வைஷம்யமுண்டு. ஆனால், பகல் இரவு இரண்டும் சேர்ந்த தினம் ஒரே சீராய் என்றும் எங்கும் 60-நாழிகைதான். பெரிதுக்கு வைஷம்யமிராது; சிறியவைக்கு வைஷம்யங்கள் காலதேசங்களால் வரலாமென்று இந்த த்ருஷ்டாந்தம். நதிகளும் குளங்களும் சிறுமை பெருமைகளை அடையும்; ஸமுத்ரம் அடையாது; ஒரே சீராயிருக்கும். ப்ரஹ்

மத்திற்குள் எல்லாம் அடங்கியது. எல்லாத்திலும் மஹத்தானது அதற்கு வைஷம்யம் ஒருகாலும் இராது. பெரியோர் ஸ்வபாவம் காலதேசங்களையநுஸரித்து மாறாது; என்றும் ஓரே ப்ரகாரமாயிருக்கும். (75)

𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌜𑍀𑌮𑍂𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌰𑍍𑌪𑌯𑌤𑌿 𑌵𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌅𑌪𑍂𑌰𑌣𑌮𑌪𑌾𑌂 𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌪𑍂𑌰𑌣𑌂 𑌚 𑌨 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

ப்ரதிக்ருஹ்ணதி ஜீமூதே ப்ரத்யர்ப்பயதி வா ஸ்வயம் l
அபூரணமபாம் பத்யு: பூரணம் ச ந லக்ஷ்யதே ll (76)

(ப-ரை) 𑌅𑌪𑌾𑌂 𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 [அபாம் பத்யு:] - நதிகளுக்குப் பதியான ஸமுத்ரத்திற்கு, 𑌜𑍀𑌮𑍂𑌤𑍇 [ஜீமூதே] - மேகம், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 [ப்ரதிக்ருஹ்ணதி] - ஜலத்தை அருந்திக்கொண்டு போகையில், 𑌅𑌪𑍂𑌰𑌣𑌂 𑌵𑌾 [அபூரணம் வா] - பூர்த்திக் குறைவாவது, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌰𑍍𑌪𑌯𑌤𑌿 [ப்ரத்யர்ப்பயதி] - (மேகம் முந்தி அருந்திய ஜலத்தை) மழையாகத் திருப்பிக்கொடுக்கும்போது, 𑌪𑍂𑌰𑌣𑌂 𑌵𑌾 [பூரணம் வா] - குறைவு பூர்த்தியாவதாவது, 𑌨 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 [ந லக்ஷ்யதே] - காணப்படவில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள் — செல்வம் முதலியது வருவது போவதனால் ஸமசித்தரான கம்பீரஸ்வபாவ மஹாபுருஷருக்கு ஸந்தோஷம், துக்கம், பூர்த்தி, அபூர்த்தி முதலிய விகாரமுண்டாகமாட்டாது. ‘நல் குரவும் செல்வமும்’ அவர்களுக்கு ஸமமாகவேயிருக்கும். தங்கள் கை மேலாயிருந்து கொடுக்கும் காலத்திலும், கை கீழாயிருந்து வாங்கும் காலத்திலும் ஏகரூபரே. கீதையின் இரண்டாவது அத்யாயத்தின் முடிவிலுள்ள ‘ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம் ஸமுத்ரமாப: ப்ரவிசந்தி யத்வத் l தத்வத் காமா யம் ப்ரவிசந்தி ஸர்வே’ என்ற ச்லோகத்தை இங்கே நினைக்கவேணும். (ஸமுத்ரத்தில் ஜலங்கள் வந்து விழுகையில், எப்படி விகாரமடையாமல் அசலப்ரதிஷ்டமாயிருக்குமோ, அப்படியே எவன் தன்னிடம் காமங்கள் வந்துவிழுகையில் அசலனாய் விகாரமற்றிருப்பானோ, அவன்தான் சாந்தியை அடைவான்). மேகங்கள் எத்தனை ஜலத்தைக் குடித்துப் போனாலும், அதனால் ஸமுத்ரத்தின் பூர்த்தி குறையாது. திரும்பவும் எத்தனை வர்ஷித்தாலும், ஸமுத்ரம் அதிகபூர்த்தியை அடைவதென்

பதுமில்லை. ‘கொள்ளக் குறைவிலனும், பூர்ணனுமான ஈச்வரனி’டமிருந்து எத்தனை எடுத்தாலும், பூர்ணன் பூர்ணனாகவேயிருப்பான். சாந்தரான ஸமசித்தருக்கு த்வந்த்வங்களால் ப்ரஹ்மானந்தபூர்த்திக்குக் குறைவிராது. ‘காணப்படுகிறதில்லை’ என்பது மிக உசிதம். நதிகள் ஸமுத்ரத்தில் விழுகையில் ஸமுத்ரஜலம் அதிகமாவதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஆனால் அப்படி அதிகமாவது வெளிக்குத் தெரியாது. உதிக்கும்பொழுது ஸூர்யன் எப்படி ராகபூர்ணனோ, அஸ்தமிக்கையிலும் அப்படியே, மேன்மையிலும் ஆபத்திலும் பெரியோர் ஏகரூபரே. (76)

𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌜𑌨𑌯𑌤𑌾𑌂 𑌨𑍀𑌚𑍈𑌰𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑌾𑌮𑌪𑌿 ।
𑌤𑍍𑌰𑌾𑌸𑌹𑍀𑌨𑌾𑌸𑍍𑌸𑍁𑌮𑌣𑌯𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌦𑍁𑌪𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇 ॥௭௭॥

சித்ரம் ஜநயதாம் நீசை: அச்சித்ரம் பிப்ரதாமபி l
த்ராஸஹீநாஸ்ஸுமணய: ஸ்வபாவாதுபகுர்வதே ll (77)

(ப-ரை) 𑌨𑍀𑌚𑍈𑌃 [நீசை:] - அடியில், கீழ்பாகத்தில், (நீசஜனங்களோடு), 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 [சித்ரம்] - த்வாரத்தை, ஓட்டையை, (உள் கலஹத்தை,) 𑌜𑌨𑌯𑌤𑌾𑌂 [ஜநயதாம்] - செய்பவருக்கும், 𑌅𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 [அச்சித்ரம்] - துளைக்காமல் அப்படியே முழுசாக, (கலஹமில்லாமல்,) 𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑌾𑌮𑌪𑌿 [பிப்ரதாமபி] - தரிப்பவருக்கும், (நடத்துபவருக்கும்,) 𑌤𑍍𑌰𑌾𑌸𑌹𑍀𑌨𑌾𑌃 [த்ராஸஹீநா:] - ரத்னதோஷமில்லாத, (பயமற்ற) 𑌸𑍁𑌮𑌣𑌯𑌃 [ஸுமணய:] - நல்ல ரத்னங்கள், (ப்ரஹ்மவித்ரத்னங்கள், வித்வந்மணிகள்,) 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 [ஸ்வபாவாத்] - தங்கள் ஸஹஜஸ்வபாவத்தாலே, 𑌉𑌪𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍇 [உபகுர்வதே] - உபகாரமே செய்வார்கள். (சோபையை, அழகைக் கொடுத்து உபகரிக்கும்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— மானம், அவமானம், எது செய்தாலும் துல்யமாக நினைக்கவேணும். நன்மை, கெடுதி எது செய்தாலும் ஏகரீதியாய் உபகாரத்தையே நினைக்கவேணும். அபகாரிகளிடமும் ஸாதுவாயிருப்பவரைத் தான் ஸத்துக்கள் ஸாதுவென்பர். தோஷமில்லாத ரத்னங்களின் ஸ்வபாவத்தை ஒக்கும் ஸாதுக்கள் சீலம். ரத்னத்தைத் துளைத்தாலும் அது அதைத் தரிப்பவருக்கு ஆபரணமாக அழகையே கொடுக்கும். துளையிடாமல் அப்படியே தரித்தாலும் அப்படியே. துளைத்தா

னேயென்று உபகாரஸ்வபாவம் மாறுகிறதில்லை. மித்ரகலஹம் செய்விப்பவரையும், மித்ரமில்லாமல் ஸமாதானத்தை வஹிப்பவரையும் மஹான்கள் ஏகரூபமாகப் பார்த்து உபசாரத்தையே செய்வர். சந்தனமரத்தைக் கோடாலியின் இரும்பு வெட்டினுலும், வெட்டும் இரும்புக்கு அது சந்தன வாஸனையை ஏராளமாய் கொடுக்கிறது. 'ஸாதுக்களிடத்திலும் பாபிகளிடத்திலும் ஸமபுத்தியுள்ளவனுயிருப்பவன் உயர்ந்தவன்' என்பது கீதை. ஊசியால் குத்துவதுபோல் துஷ்டர்கள் ஸாதுக்களை ஹிம்ஸிப்பர். (79)

அநுஜ்ஜிதஸௌஹ்ருத்பாவஸ்ஸௌஹ்ருதாம் துர்ஹ்ருதாமபி ।
ஸம இத்யேவ பாவ்யோऽபி ந ம இத்யபிபாவ்யதே ॥௭அ॥

அநுஜ்ஜிதஸௌஹ்ருத்பாவஸ்ஸௌஹ்ருதாம் துர்ஹ்ருதாமபி 1
ஸம இத்யேவ பாவ்யோZபி ந ம இத்யபிபாவ்யதே ll (78)

(ப-ரை) ஸௌஹ்ருதாம் [ஸௌஹ்ருதாம்] - ஸௌஹ்ருத்துக்கள் விஷயமாயும், துர்ஹ்ருதாமபி [துர்ஹ்ருதாமபி] - விரோதிகள் விஷயமாயும், (ஒரேமாதிரியாய்), அநுஜ்ஜிதஸௌஹ்ருத்பாவ: [அநுஜ்ஜிதஸௌஹ்ருத்பாவ:] - நீங்காத ஸ்நேஹபாவத்தை உடையவர், (மஹான்), ஸமே இதி [ஸமே இதி] - அவர் என்னைச்சேர்ந்தவர் என்றே, (நம்மால்,) பாவ்யோZபி [பாவ்ய: அபி] - பாவிக்கத்தக்கவராயினும், ந மே இதி [ந மே இதி] - என்னைச் சேர்ந்தவரல்ல என்று, அபிபாவ்யதே [அபிபாவ்யதே] - திரஸ்கரிக்கப்படுகிறுர். (தள்ளப்படுகிறுர். தூரத்திலேயே ஒதுங்கி வர்ஜிக்கப்படுகிறுர்.)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்—"ஸௌஹ்ருத்துக்கள், மித்ரர்கள், சத்ருக்கள், உதாஸீனர் (சத்ருத்வமும் மித்ரத்வமும் இல்லாதவர்) மத்யஸ்தர், த்வேஷ்யர், பந்துக்கள் ஆகிய எல்லோரிடமும் ஸமபுத்தியாயிருப்பவர் உயர்ந்தவர்" என்பது கீதை. இப்படி எங்கும் ஸமராயிருப்பவரை, 'ஸமே' (அவர் எனக்கு அநுகூலரே) என்று எல்லோரும் பாவிக்கத் தக்கவராயிருந்தும், சத்ருக்களாயிருப்பவர் தங்கள் துஷ்டஸ்வபாவத்தால் அவரை 'ந மே' (எனக்கு அநுகூலர் அல்லர்) என்று திரஸ்கரிக்கிறுர்கள். அவர் ஸமராயிருந்தாலும், அவரை உயர்ந்தவர் என்று 'நம:' என்று நமஸ்சரிக்கவேண்டியது உசிதமாயிருக்க, 'நம இதி, ந மே

இதி' என்று தள்ளப்படுகிறுர். 'நம:' என்று நமஸ்காரம் செய்ய வேண்டியதற்குப் பதிலாக 'ந மே' என்று தள்ளுகிறுர்கள். துஷ்டனுக்கு ஓர் நமஸ்காரம் என்று அவரைக் கண்டு தூரத்திலேயே ஒதுங்கி வர்ஜிக்கிறுர்கள். (78)

மருத்பி: பீட்யமானோऽபி ஸந்த்யக்தோऽபி திவாநிசம் ।
விஷயஸ்நேஹரஹிதோ ரத்நதீப: ப்ரகாசதே ॥௭௯॥

மருத்பி: பீட்யமானோZபி ஸந்த்யக்தோபிZ திவாநிசம் 1
விஷயஸ்நேஹரஹிதோ ரத்நதீப: ப்ரகாசதே ll (79)

(ப-ரை) மருத்பி: [மருத்பி:] - காற்றுகளால், (இந்த்ரியவாதங்களால், தேவரால்,) பீட்யமானோZபி [பீட்யமானோZபி]- உபத்ரவிக்கப்பட்டாலும், ஸந்த்யக்தோZபி [ஸந்த்யக்தோZபி] - கவனிக்காமலே விட்டுவிட்டாலும், (காமங்களை அடியோடுதுறந்தும்,) விஷயஸ்நேஹரஹித: [விஷயஸ்நேஹரஹித:] - விளக்கு பாண்டமும் தைலமுமில்லாத, ரத்நதீப: [ரத்னதீப:] - ரத்ன விளக்கு, (ஜ்ஞானி என்னும் சுடர்,) திவாநிசம் [திவாநிசம்] - பகலிலும் ராத்ரியிலும் ஓயாமல், ப்ரகாசதே [ப்ரகாசதே] - ப்ரகாசிக்கிறது. (ஜ்வலிக்கிறுர்.)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— கீதையே நெஞ்சில் ஓடுகிறது. "காற்றில்லாத இடத்திலிருக்கும் தீபம் அசங்காமல் (சலிக்காமல்) இருப்பது எப்படியோ, அப்படியே இந்த்ரியங்களை அடக்கி யோகத்தை அப்யஸிக்கும் யோகியும் சலிக்கமாட்டான். அந்த தீபம் அவனுக்கு உபமானமாகுமென்பர்" என்பது கீதை. துளிக்காற்றடித்தாலும் தீபம் ஆடும். துளிப் பற்று வைத்துவிட்டால், யோகியின் மனது ஆடிவிடும் என்பது த்ருஷ்டாந்தஸ்வாரஸ்யம். மனமெனும் சுடர் அசங்காமல் அசலமாயிருப்பது விளக்கு காற்றிலாடாமலிருப்பதுபோல அத்தனை கடினம். 'ரத்நதீபம்' என்பது ரத்னமே தன் ஒளியால் தீபகார்யத்தைச் செய்வது. கந்தர்வலோகம் முதலிய இடங்களில் ரத்நதீபங்களுண்டென்பர். சில ஓஷதிகள் இரவில் தீபம்போல வெளிச்சம் கொடுக்கும். ரத்னதீபங்களுக்கு 'ஸ்நேஹம்' என்னும் தைலம் வேண்டியது இல்லை; காற்றிலும் ஆடாது. ரத்னதீபத்தை யோகிக்கு உவமையாகச் சொல்லுவது கீதை கூறிய உவமையிலும் நெருங்கிய

உவமையாகும். பெருமாள் காட்டிய உவமையில் ஸ்நேஹமுண்டு; சிறிது காற்றிலும் அசங்குவதுண்டு; தீபத்தைக் கவனியாமல் விட்டுவிட்டால் அணைந்துபோகும். இங்கே எப்படி யோகி 'த்யக்தரோ', அப்படி ரத்னதீபமும், கவனியாமல் த்யக்தமாயிருக்கலாம். விஷயக்காற்றுகள் கொஞ்சமிருந்தாலும், யோகம் கலங்கி ஆடுமென்று காட்டுவது கீதை உவமையில் ரஸம். 'ஜ்ஞானிகள் ரத்னங்கள்', அவர்கள்சுடர்கள். அவர்களை ரத்னச் சுடரென்றும், சுடர் ரத்னமென்றும் புகழலாம். அவர்கள் ஜ்ஞானப்ரகாசத்தைப் பிறருக்குக் கொடுப்பது பகலிலேயே அதிகம். யோகத்திற்கு தேவர்களே விக்னங்கள் செய்வர். (79)

𑌜𑌨𑌯𑌤𑍍𑌯𑌨𑌿𑌲𑍇 𑌦𑌾𑌵𑌂 𑌶𑌮𑌯𑌤𑍍𑌯𑌪𑌿 𑌤𑍋𑌯𑌦𑍇 ।
𑌅𑌭𑌿𑌨𑍍𑌨𑍈𑌃 𑌸𑍍𑌥𑍀𑌯𑌤𑍇 𑌪𑍁𑌣𑍍𑌯𑍈𑌰𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌰𑌣𑍍𑌯𑌪𑌾𑌦𑌪𑍈𑌃 ॥

ஜனயத்யநிலே தாவம் சமயத்யபி தோயதே ।
அபிந்நை: ஸ்தீயதே புண்யைராச்ரமாரண்யபாதபை: ॥ (80)

(பதவுரை) 𑌪𑍁𑌣𑍍𑌯𑍈𑌃 [புண்யை:] - புண்யங்களான, 𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌰𑌣𑍍𑌯𑌪𑌾𑌦𑌪𑍈𑌃 [ஆஶ்ரமாரண்யபாதபை:] - ஆச்ரமவன வ்ருக்ஷங்களால், 𑌦𑌾𑌵𑌂 [தாவம்] - காட்டுத் தீயை, 𑌜𑌨𑌯𑌤𑌿 [ஜநயதி] - உண்டுபண்ணும், 𑌅𑌨𑌿𑌲𑍇 [அநிலே] - காற்றுவிஷயத்திலும், 𑌶𑌮𑌯𑌤𑌿 [சமயதி] - அந்த நெருப்பை அணைக்கும், 𑌤𑍋𑌯𑌦𑍇𑌽𑌪𑌿 [தோயதேऽபி] - வர்ஷிக்கும் மேகத்தின் விஷயத்திலும், 𑌅𑌭𑌿𑌨𑍍𑌨𑍈𑌃 [அபிந்நை:] - பேதமில்லாமல் ஒரேமாதிரியாக, 𑌸𑍍𑌥𑍀𑌯𑌤𑍇 [ஸ்தீயதே] - இருப்பது (காணப்படுகிறது.)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஹிம்ஸிப்பவரையும் நன்மை செய்பவரையும், வேற்றுமையில்லாமல் ஏகரூபமாய், ஸமமாய்ப் பார்ப்பது சான்றோர் ஸ்வபாவம். தன்னைக் கடுந்தீயினால் கொளுத்த முயன்ற ஹிம்ஸகரை ப்ரஹ்லாதாழ்வார் த்வேஷிக்கவில்லை. 'மித்ராமித்ரகதா குத:' (மித்ரர் என்றும், அமித்ரர் என்றும் பிரித்துப் பேசுவதற்கு இடமேது) என்றார். 'ஸமத்வமாராதனம் அச்யுதஸ்ய' (எல்லோரையும் ஸமமாகப் பார்ப்பதுதான் அச்யுதனுக்கு ஆராதனம்) என்றார். சாந்தர்களான மஹர்ஷிகள் வஸிக்கும் தபோவனங்களிலுள்ள வ்ருக்ஷங்களுக்கும் இந்த ஸமஸ்வபாவம் உண்டென்று அழகாகக் காட்டுகிறார். அந்த ருஷிகளுக்கு ஸமத்வமிராமற்போகுமோ ? (80)

𑌅𑌹𑌾𑌰𑍍𑌯𑍇𑌣 𑌕𑌦𑌾𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑍈𑌰𑌸𑌂𑌹𑌾𑌰𑍍𑌯𑍇𑌣 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 ।
𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑌾𑌕𑌵𑌚𑍇𑌨𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌯𑌤𑌿 𑌸𑌂𑌵𑍃𑌤𑌃 ॥ ௮௧ ॥

அஹார்யேண கதாப்யந்யைரஸம்ஹார்யேண கேநசித் ।
திதிக்ஷாகவசேநைவ ஸர்வம் ஜயதி ஸம்வ்ருத: ॥ (81)

(பதவுரை) 𑌕𑌦𑌾𑌪𑌿 [கதாபி] - எக்காலும், 𑌅𑌨𑍍𑌯𑍈𑌃 [அந்யை:] - பிறரால், 𑌅𑌹𑌾𑌰𑍍𑌯𑍇𑌣 [அஹார்யேண] - அபஹரிக்கமுடியாததும், 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 [கேநசித்] - ஒருவராலும், 𑌅𑌸𑌂𑌹𑌾𑌰𑍍𑌯𑍇𑌣 [அஸம்ஹார்யேண] - அழிக்கக்கூடாததுமான, 𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑌾𑌕𑌵𑌚𑍇𑌨𑍈𑌵 [திதிக்ஷாகவசேநைவ] - பொறுத்தல் என்னும் கவசத்தால் மட்டும், 𑌸𑌂𑌵𑍃𑌤𑌃 [ஸம்வ்ருத:] - மூடி ரக்ஷிக்கப்பட்டவன், 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌜𑌯𑌤𑌿 [ஸர்வம் ஏவ ஜயதி] - எல்லோரையும் (எல்லாவற்றையும்) ஜயித்துவிடுவான். 𑌜𑌯𑌤𑍍𑌯𑍇𑌵 [ஜயத்யேவ] - ஜயித்தேவிடுவான்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— பொறுமை என்னும் கவசத்தைப் போத்திபிருப்பவரை சொல்லம்புகள் முதலியன புண்படுத்தமாட்டா. அவரை ஹிம்ஸிப்பதினால் கோபமூட்ட முடியாது. திட்டியும் அவமானப்படுத்தியும் கூடியவரையில் ஹிம்ஸிக்கப்பார்த்தும் அவர் கோபியாதபடியால், ஹிம்ஸிப்பவனுக்கே ஏன் ஹிம்ஸித்தோமென்று வெட்கமும் அநுதாபமுமுண்டாகும். 'திதிக்ஷை' என்பது சீதோஷ்ணங்களையும், ஸுகதுக்கங்களையும் பொறுப்பதையும் சொல்லும். கீதோபதேசாரம்பத்திலேயே "சீதோஷ்ணஸுகதுக்கங்களைக் கொடுக்கும் ப்ரக்ருதிஸ்பர்சங்களை நீ திதிக்ஷை (பொறுத்தல்) செய்வாயாக. துக்கஸுகங்களை ஸமமாகப்பார்க்கும் எந்த தீரபுருஷனை இவை வருத்தாவோ, அவன் மோக்ஷத்திற்கு யோக்யன்" என்று ஸாதிக்கப்பட்டதை நினைக்கிறார். (81)

𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑌂 𑌕𑌂𑌚𑌿𑌤𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑍇𑌘𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ।
𑌉𑌦𑌨𑍍𑌯𑌯𑌾 𑌨 𑌵𑍇𑌶𑌨𑍍𑌤𑌮𑍁𑌦𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌵𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 ॥ ௮௨ ॥

அம்ருதஸ்யந்திநம் கச்சித் க்ருஷ்ணமேகம் த்விஜ: ஸ்மரந் ।
உதந்யயா ந வேசந்தமுதந்வந்தம் ச வீக்ஷதே ॥ (82)

(பதவுரை) 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑌂 [அம்ருதஸ்யந்திநம்] - ஜலத்தை வர்ஷிக்கும், (அம்ருதத்தைப் பொழியும், அம்ருதத்வமென்

னும் மோக்ஷம் தரும்,) க்ருஷ்ணமேகம் [க்ருஷ்ணமேகம்] - கருமேகத்தை, (க்ருஷ்ணனென்னும் கருமுகிலை), ஸ்மரந் [ஸ்மரந்]- நினைத்துக்கொண்டிருக்கிற, (த்யானித்துக்கொண்டிருக்கிற,) கச்சித் [கச்சித்]-ஓர், த்விஜ: [த்விஜ:]-பக்ஷி சாதகம், உதங்கரிஷி, (பிறவியை அழிக்கும் மறு பிறவி பெற்ற ப்ரஹ்மவித்து, ஜ்ஞானப்பிறவி பெற்றவன்,) 'உதந்யயா [உதந்யயா] - தாஹத்தால், (தாஹம் தீர்ப்பதற்காக, வேசந்தம் [வேசந்தம்] - குட்டையையும், உதந்வந்தம் ச [உதந்வந்தம் ச] - ஸமுத்ரத்தையும், ந வீக்ஷதே [ந வீக்ஷதே] - கண்ணெடுத்துப் பாரான்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனே' என்ற நிஷ்டையுள்ளவர் ப்ரஹ்மவித்துக்கள். கண்ணனொன்றே அவர்களுக்கு ரஸம். மற்றோர் ரஸம் அறியார். கண்ணனே தாரகமும் போஷகமும் போக்யமும். எல்லாப் பொருளும் அவர்களுக்குக் கண்ணனாகவே ஒரேரூபமாக ஸமமாக அநுபவவிஷயமாகும். "அவனல்லவோ ரஸம், அவனே ரஸம், ஆனந்தமயரஸமான அவனை அடைந்தல்லவோ எல்லா ஸுகங்களையும் துறந்த இந்த ப்ரஹ்மவித்து ஆனந்தம் அடைகிறான்" என்பது உபநிஷத்து. யத்ருச்சையாக (தானாக) ப்ரயத்னமன்றியில் பகவானைக் கொடுத்ததைக்கொண்டு ஸந்துஷ்டனாய், த்வந்த்வங்களைத் தாண்டினவனாய் ஒருவரிடமும்மத்ஸரமில்லாதவனாய், ஸித்தி அஸித்தி இரண்டிலும் ஸமனாயிருப்பவனைக் கர்மங்கள் பந்தப்படுத்தமாட்டா" என்ற கீதாவசனத்தையும் இங்கே நினைக்கிறார். சாதகங்கள் பரமைகாந்திகளுக்கு உவமானம். 'நேக்ஷாரகம் ஹி வீக்ஷதே' என்று ஸ்தோத்ரரத்னத்தின் அநுபவத்தை 'ந வீக்ஷதே' என்று அநுஸரிக்கிறார். 'நான் ஜலபானத்தைக்கூட விட்டிருந்தாலும், க்ருஷ்ணகதாம்ருதம் உம்முடைய முககமலத்திலிருந்து பெருகிவிழுவதைப் பருகும் என்னைப் பொறுக்கவொண்ணா பசியும் உபத்ரவிக்கவில்லை' என்றார் பரீக்ஷித்து. (82)

விததாது தாம தமஸா க்ருதேந கிம்
யதி வா ந வேத்தி ந விதிர் ந வா வயம் ।
ப்ரதமோபகாரி சரமம் யதஸ்தத:
ப்ரதியோகிநோ பவதி தஸ்ய ஸார்த்ததா ॥ ௮௩ ॥

விததாது தாம தமஸா க்ருதேந கிம்
யதி வா ந வேத்தி ந விதிர் ந வா வயம் ।
ப்ரதமோபகாரி சரமம் யதஸ்தத:
ப்ரதியோகிநோ பவதி தஸ்ய ஸார்த்ததா ॥ (83)

(ப-ரை) விதி: [விதி:] - ஸ்ருஷ்டிகர்த்தா, தாம [தாம] - தேஜஸ்ஸை, (வெளிச்சத்தை,) விததாது [விததாது] - ஸ்ருஷ்டிக்கட்டும், தமஸா க்ருதேந [தமஸா க்ருதேந]- இருட்டை ஸ்ருஷ்டித்ததால், கிம் [கிம்] - என்ன பயன்? யதி வா [யதிவா] - அல்லது, விதி: ந ந வேத்தி [விதி: ந ந வேத்தி] - படைத்தவன் அறியாதவனென்பதில்லை. ந வா வயம் [ந வா வயம்]-நாமாவது அறியாதவரென்பதில்லை. சரமம் [சரமம்] - பின்சொன்னது, (அதாவது- இருட்டு) ப்ரதமோபகாரி யதஸ்தத: [ப்ரதமோபகாரி யதஸ்தத:] - முதற்சொன்ன வெளிச்சத்திற்கு உபகாரம் செய்கிறதென்ற ஓர்காரணத்தினாலேயே, ப்ரதியோகிந: [ப்ரதியோகிந:] - வெளிச்சத்திற்கு எதிரிடையான, தஸ்ய [தஸ்ய] - இருட்டுக்கு, ஸார்த்ததா [ஸார்த்ததா] - உபயோகம் ஏற்பட்டு வருகிறது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஈச்வரனை ஸமர் என்பர். ஸர்வஸமனான ஈச்வரன் ஏன் பரஸ்பரவிரோதிகளான த்வந்த்வங்களை ஸ்ருஷ்டித்தார். ஈச்வரன் விஷமனானல், காரணமான அவனுக்குத் தக்கபடி கார்யங்களும் விஷமமாயிருக்கலாம். ஸமமான காரணத்தினிடமிருந்து விஷமமான நலந்தீங்குகளும், வெளிச்சஇருட்டுகளும், நித்யானந்தவிபூதி, துக்கவிபூதிகளும் இன்னும் மற்ற விரோதி இரட்டைகளும் எப்படி உண்டாகும்? ஸ்ருஷ்டிக்கும் ஈச்வரன் ஸர்வஜ்ஞனாயிற்றே! நமக்கு இப்படி கார்யங்கள் விஷமமாகப் புலப்படுகின்றனவே. அவன் செய்வது சுபோதர்க்கமாக, மங்களமாக, ஒரே ஸுகமாக ஆகவேணுமே. இருட்டை ஸ்ருஷ்டித்ததற்கு ஏதாவது பயன் சொல்லமுடியுமோ? நமக்கு ஜ்ஞானமிருந்தால், ஸர்வஜ்ஞனை அறியாதவனென்று கொள்ளாமல், அதற்கு நல்ல பயன் கொள்ளலாம் என்கிறார். வெயில் இல்லாமற்போனால் நிழல் அருமை தெரியாதே. துக்கப்பட்டவனுக்கு ஸுகத்தின் அருமை தெரியும். ச்ரமப்பட்டவனுக்கு விச்

ரமத்தின் அருமை தெரியும். வெளிச்சத்தின் பெருமையை விரோதியான இருட்டு ப்ரகாசப்படுத்தும். துர்ஜனன் இருப்பது ஸாதுக்களின் ஏற்றத்தைத் தூக்கிக்காட்டும். 'தமஸ்' என்பது இந்த ப்ரக்ருதிமண்டலத்தைச் சொல்லும். 'தாம' என்பது நித்ய ப்ரகாசமான 'பரந்தாமத்தை'ச் சொல்லும். ஸம்ஸாரச்ரமமறிந்தவர் மோக்ஷஸுகத்தின் அருமையை அறிவார். இந்த ப்ரக்ருதி மண்டலத்தில் கஷ்டங்களே அதிகம் என்பதை அறியும்படிக்கும், கஷ்டம் இல்லாத ஸுகத்தின் அருமையை அறியும்படிக்கும், இரண்டும் இங்கே படைக்கப்பட்டிருக்கின்றன. ஜனங்களுக்கு வைராக்யம் உண்டாகி, மோக்ஷத்தை விரும்பவே கஷ்டங்கள் படைக்கப்பட்டுள. பசி தெரிந்திராவிடின் 'அஹம் அந்நாத:' (நான் இன்று பசி தீர உண்ணுகிறேன், இனி எனக்குப் பட்டினி நாள் இல்லை) என்று ஆனந்தமாக ஸாமம் பாடுவரோ? துக்கத்தை அதிகமாகக் கொடுக்கும் இந்த ப்ரக்ருதியை வெறுத்து, 'தாம' என்னும் வீட்டை விரும்பும்படி செய்து, அவர்களை மோக்ஷ யோக்யர்களாக்கத்தான் ஈச்வரன் ஆசை. எல்லோரும் முக்தராக வேணும். இந்த லீலாவிபூதியில் ஒருவரும் பாக்கியிராமல், நிச்சேஷமாகத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்றே ஈச்வரன் பாடுபடுகிறார். எல்லோரும் முக்தராகித் தன்னோடு ஸமராகவேண்டும் என்று அவர் ஆசை. விஷமஸ்ருஷ்டியும் வைராக்யத்தை உண்டாக்கி எல்லோரையும் முக்தியடையச் செய்வது ஸமராக்கத்தான். ஸர்வமுக்தி வந்துவிட்டால் பெருமாள் தயைக்கு இருக்கும் எல்லை அடியோடு நீங்கிவிடும். (83)

விஷயெஷ்வபி (விபவெஷ்வபி) தொஷகந்தஹீந:
ப்ரளயெऽபி ஸ்திதிமக்ஷயாம் ததாந: ।
விஷமெஷ்வபி பாவயந் ஸமத்வம்
புருஷ: கொऽபி ஹ்ருதி ஸ்தித: ப்ரஜாநாம் ॥

விஷயேஷ்வபி (விபவேஷ்வபி) தோஷகந்தஹீந:
ப்ரளயேऽபி ஸ்திதிமக்ஷயாம் ததாந: ।
விஷமேஷ்வபி பாவயந் ஸமத்வம்
புருஷ: கோऽபி ஹ்ருதி ஸ்தித: ப்ரஜாநாம் ॥ (84)

(ப-ரை) விஷயெஷ்வபி [விஷயேஷ்வபி] - சிற்றின்பவிஷயங்கள் கைக்குக் கிடைத்திருந்தாலும், (எந்த ஹீனப்பொருள்களில் வ்யாபித்திருந்தாலும்,) தொஷகந்தஹீந: [தோஷகந்தஹீன:] - அவற்றில் பற்று முதலிய தோஷலேசமில்லாதவனாய், (ஹீனப்பொருளிலிருப்பதனால் தனக்கு யாதொரு தோஷமும் ஏற்படாதவனும்,) ப்ரளயெऽபி [ப்ரளயேऽபி] - பெரும் ஸங்கடம் பிறந்தபோதும், (ப்ரளயகாலத்திலும்,) அக்ஷயாம் [அக்ஷயாம்] - அழிவில்லாத, ஸ்திதிம் [ஸ்திதிம்] - தைர்யத்தை, (இருப்பை,) ததாந: [ததான:] - தரிப்பவராயும், (உடையவராயும், உண்டுபண்ணுபவராயும்,) விஷமெஷ்வபி [விஷமேஷ்வபி] - விரோதிகளிடம்கூட, (பல பேதங்களால் விஷமமாயிருக்கும் ப்ராணிகளிடம்,) ஸமத்வம் [ஸமத்வம்] - ஸமத்தன்மையை, (முக்குணமும் ஸமமாயுள்ள ப்ரளய நிலையை,) பாவயந் [பாவயந்] - பாராட்டிக்கொண்டு, (ஸங்கல்பித்துக்கொண்டு,) ப்ரஜாநாம் [ப்ரஜானாம்] - குழந்தைகளான ப்ராணிகளுடைய, ஹ்ருதி [ஹ்ருதி] - ஹ்ருதயத்தில், ஸ்தித: [ஸ்தித:] - நல்லவன் என்று கொண்டாடிப் போற்றப்படும், (அந்தர்யாமியாக இருக்கும்,) புருஷ: கொऽபி [புருஷ: கோபி] - யாரோ மஹா மஹிமையுடைய புருஷன் (உளன்.)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஸர்வஸமனான ஈச்வரனுக்கும், ஸமத்வத்தையே பாராட்டும் மஹாபுருஷருக்கும் ஸாம்யத்தைப் பேசி, இப்பத்ததியை முடிக்கிறார். ஈச்வரனைப் போல இம்மஹானும், அருமையானவர். ஈச்வரன் எல்லோர் ஹ்ருதயத்திலுமிருப்பதுபோல், இவரையும் எல்லோரும் மனத்தில் எழுந்தருளப் பண்ணிப் போற்றுவர். ப்ரளயம்போன்ற ஆபத்திலும் தங்கள் தைர்யநிலையை நழுவவிடார்; பிறரையும் ரக்ஷிப்பார். ப்ரளயத்திலும் பகவான் அச்யுதராயிருக்கிறார்; ப்ரபஞ்சம் முழுவதையும் ஸத்தாகவே தன்னிடம் வைத்து ரக்ஷிக்கிறார். இன்ப விஷயங்களுடைய சேர்க்கையால், மஹான்கள் விகாரமடைவதில்லை. ஹீனவஸ்துக்களிலிருப்பதால், பகவானுக்குத் தோஷம் அணுகுவதில்லை. 'கஸ்ய சித் பும்ஸ:' என்று இப்பத்ததியைத் துடங்கி, 'புருஷ: கோபி' என்று முடித்தது கவனிக்கத்தக்கது. (84)

ஏழாவது ஸமசித்தபத்ததி முற்றிற்று.

எட்டாவது ஸதாச்ரிதபத்ததி.

ஸம்வ்ருத்தஸ்யாவதாதஸ்ய கலாபூர்ணஸ்ய ஸத்பதே: ।
க்ஷணலேசக்ரஹேZபி ஸ்யாததீர்த்தஸ்யாபி தீர்த்ததா ॥

ஸம்வ்ருத்தஸ்யாவதாதஸ்ய கலாபூர்ணஸ்ய ஸத்பதே: ।
க்ஷணலேசக்ரஹேZபி ஸ்யாததீர்த்தஸ்யாபி தீர்த்ததா ॥ (85)

(பதவுரை) ஸம்வ்ருத்தஸ்ய [ஸம்வ்ருத்தஸ்ய] - மூளியில்லாமல் முழுவட்டமான, (நல்லொழுக்கத்தை உடையவராய்), அவதாதஸ்ய [அவதாதஸ்ய]-சுத்த வெண்மையான, (மாசற்றசுத்தமான), கலாபூர்ணஸ்ய [கலாபூர்ணஸ்ய] - பதினைந்து கலைகளும் நிரம்பிப் பூர்ணமான, (கல்விக்கலைகள் நிரம்பிய,) ஸத்பதே: [ஸத்பதே:] - ஸத்துக்களென்னும் நக்ஷத்ரங்களுக்குப் பதியான சந்த்ரனோடு, (ஸத்துக்களுக்குள் ச்ரேஷ்டரான ப்ரஹ்மவித்தோடு,) க்ஷணலேசக்ரஹேZபி [க்ஷணலேசக்ரஹேZபி] - ஒரு க்ஷணம் க்ரஹணம் (ஸ்பர்சம்) வரநேருகையிலும், (ஸ்வல்பகாலம் சேர்க்கை வருகையில்,) அதீர்த்தஸ்யாபி [அதீர்த்தஸ்யாபி]- புண்யதீர்த்தமல்லாத ஜலங்களுக்கும், (பரிசுத்தமல்லாதவருக்கும்,) தீர்த்ததா [தீர்த்ததா] - புண்யதீர்த்தமென்னும் பெருமை, (பரிசுத்தி,) ஸ்யாத் [ஸ்யாத்] - ஏற்படும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— எல்லாத்தையும் ஸமமாகப் பார்க்கும் மனமுடைமையின் பெருமையைக் காட்டப்பட்டது. மஹாபுருஷர் எல்லாவற்றையும் ஸமமாகப் பார்ப்பர் என்று நிரூபிக்கப்பட்டது. ஸமமாகப் பார்ப்பது மட்டுமன்று; தங்களைப்போல ஸமமாக (உயர்த்தியை)ச் செய்யும் மஹிமையுமவர்களுக்கு உண்டென்பதும் இங்கே நிரூபிக்கப்படுகிறது. ஸத்துக்களின் க்ஷணச்சேர்க்கையால், அஸத்தும் ஸத்தாகி அவருக்கு ஸமமாவான். ஆச்ரிதரைத் தம்மைப்போல ஸமராக்குவது ஈச்வரனுக்கும், அவன் திருவடி பணியும் பெரியோருக்கும் ஸ்வபாவம். பூர்ணசந்த்ரனுடைய க்ரஹம் நேர்ந்த காலத்தில் 'ஸர்வம் கங்கா ஜலம் தோயம்', எல்லா ஜலங்களும் வாசியற கங்கைநீரைப்போல பரிசுத்தமாகின்றன. பூர்ணசந்த்ரனுக்கும், ஸாதுச்ரேஷ்டருக்கும் உவமானம். பூர்ணசந்த்ரனோடு துடங்கி யதுகுலபூர்ணசந்த்ரனை கண்ணனைப் பேசி இப்பத்ததியை முடிக்கிறார். 'தீர்த்த' என்பது புண்யதீர்த்தத்தையும், பரிசுத்தரான குருக்களையும் சொல்லும். தம் நெஞ்சில் கதாதரனைத் தரிக்கும் மஹிமையால், ஸாதுக்கள் (தீர்த்தங்கள்) புண்யதீர்த்தங்களை, (ஜலங்களை) தீர்த்தமாக்குவர் (புனிதமாக்குவர்) என்பது ப்ரமாணம். தீர்த்தரான பெரியோர், தம்மை க்ஷணகாலம் ஆச்ரயித்து ஸங்கம் பெறும் அசுத்தரையும் தீர்த்தராக்குவர். 'வைஷ்ணவஸம்ச்ரயத்தால் பசு, பக்ஷி, மனுஷ்யர்களும், இந்த ஆச்ரயபலத்தாலே விஷ்ணுவின் பரமபதத்தை அடைவர்'. (85)

ப்ரதிபத்ப்ராப்தித: ப்ராகப்யாபதா ஸத்பதாச்ரித: ।
ராஜா தத்ததரோ வாபி நோபராகேண க்ருஹ்யதே ॥

189910

ப்ரதிபத் ப்ராப்தித: ப்ராகப்யாபதா ஸத்பதாச்ரித: ।
ராஜா ததிதரோ வாபி நோபராகேண க்ருஹ்யதே ॥ (86)

(பதவுரை) ப்ராக் [ப்ராக்] - முன்பு, ஆபதா [ஆபதா] ஆபத்தோடுகூடியிருந்தாலும், ஸத்பதாச்ரித: [ஸத்பதாச்ரித:]- நக்ஷத்ரமார்க்கத்தை ஆச்ரயித்த, (ஸத்துக்களின் பாதங்களை ஆச்ரயித்த), ராஜா ததிதரோ வாபி [ராஜா ததிதரோ வாபி]- சந்த்ரனும், ஸூர்யனும், (அரசனோ, ஸாமாந்யனோ,) ப்ரதிபத்ப்ராப்தித: [ப்ரதிபத் ப்ராப்தித:] - ப்ரதமா திதியை அடைவதால், (ஜ்ஞானத்தைப் பெற்று,) பிறகு, உபராகேண [உபராகேண] - க்ரஹணத்தினால், (ஆசாபாசங்களால்), ந க்ருஹ்யதே [ந க்ருஹ்யதே] - பிடிக்கப்படுகிறதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள் — 'ஸத்பதம்' என்பது நக்ஷத்ரமார்க்கமான ஆகாசத்தையும், ஸத்துக்களின் திருவடியையும் சொல்லும். 'ப்ரதிபத்' என்பது ப்ரதமை திதியையும் ஜ்ஞானத்தையும் சொல்லும். 'ராஜா' என்பது சந்த்ரனையும், அரசனையும் சொல்லும்; யக்ஷனையும் சொல்லும். பெரியோர் திருவடியைப் பற்றி யக்ஷகிந்நராதிகளும் சிற்றின்பங்களைத் துறந்து அஸங்கமாவார். சந்த்ர ஸூர்யாதி தேஜோமயபுருஷரும், ஜ்ஞானத்தால் நிரபாயமான ஸ்திதியைப் பெறுவர். க்ரஹணகாலத்திலும் சந்த்ரனுடைய புண்யகுணம் முன் ச்லோகத்தில் காட்டப்பட்டது.

11/13553
1437'3

இங்கே சந்த்ரஸூர்யருக்கும் ஜ்ஞானத்தால் ஸத்பதாச்ரயத்தால் க்ரஹணமே வராதிருப்பதைக் காட்டுகிறார். அவர்களே ஜ்ஞானத்தால் முக்தி பெற்றுவிட்டால் க்ரஹணப்ரஸக்தி ஏது? ‘அபாதார்ஹ பதாச்ரித:’ என்றும் பாடம். தள்ளப்பட இடமில்லாத அசஞ்சலஸ்தானத்திலிருந்தாலும், சந்த்ரபாதனென்பது ராஹு கேதுக்களையும் சொல்லும். (86)

𑌵𑌿𑌷𑌮𑍋 𑌗𑍁𑌣𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌨𑍍 𑌜𑌨𑌯𑌨𑍍 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌸𑌮𑌯𑍇 𑌮𑌹𑌤𑌾 𑌯𑍋𑌗𑌾𑌦𑌹𑌂𑌕𑌾𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌤𑍇 ॥ ௮௭ ॥

விஷமோ குணபேதேந விகாராந் ஜநயந் க்ரமாத் ।
ஸமயே மஹதா யோகாதஹங்கார: ப்ரதீயதே ॥ (87)

(ப-ரை) 𑌵𑌿𑌷𑌮𑌃 [விஷம:]- முக்குணமும் ஸமமாக ப்ரளயத்திலிருந்த ‘ப்ரதானம்’ ‘மூலப்ரக்ருதி’ என்ற நிலைநீங்கிய ப்ரக்ருதித்துவம், (விஷமமானவனும்,) 𑌗𑍁𑌣𑌭𑍇𑌦𑍇𑌨 [குணபேதேன] - முக்குணங்களின் ஏற்றத் தாழ்ச்சியால், 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 [க்ரமாத்] - ஸ்ருஷ்டிக்ரமப்படி, (காலக்ரமத்தில்,) 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌨𑍍 [விகாராந்]- திரிபுகளை, (தத்துவவிகாரங்களை, மனோசேஷ்டிதவிகாரங்களை,) 𑌜𑌨𑌯𑌨𑍍 [ஜநயன்] - உண்டுபண்ணிக்கொண்டிருக்கும்போது, 𑌸𑌮𑌯𑍇 [ஸமயே] - ஓர் காலத்தில், (ஓர் பாக்யவசத்தால்,) 𑌮𑌹𑌤𑌾 [மஹதா] - ‘மஹான்’ என்னும் பெயரையுடைய இரண்டாவது ப்ரக்ருதி விகாரத்தோடு சேர்க்கையால், (மஹாபுருஷரோடு ஸம்பந்தம் பெற்றதால்,) 𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌃 [அஹங்காரம்] - அஹங்காரம் என்ற மூன்றாவது தத்துவமாக, (ப்ரஹ்மத்தினிடத்தில் தன்னைச் சொருகிக்கொண்டே, அவன் நான் என்ற பேச்சும்புத்தியும் வரும் ஜ்ஞானியாக,) 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌤𑍇 [ப்ரதீயதே]- பரிணமிக்கிறது. (விளங்குகிறான்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ‘மஹான்’ என்று பெயரிருப்பதால், அப்பெயருடைய ஜடதத்துவமும் தன்னுடைய சேர்க்கையினால், மேன்மையைத் தருமென்று வேடிக்கையாகக் காட்டுகிறார். மூலப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், என்று தத்துவபரிணமக்ரமம். முக்குணங்களும் ஸமமாயுள்ளது ப்ரளயாவஸ்தை. முக்குணங்களும் ஒன்றுக்கொன்று விஷமமாகி, ஸ்ருஷ்டி

என்னும் விகாரபரிணமங்கள் தொடங்கும். மூலப்ரக்ருதி, மஹத்தாக பரிணமிக்கிறது. மஹத்தாக ஆனதும், அதன் யோகத்தால் அடுத்த ‘அஹங்காரம்’ என்னும் பரிணமம் ஏற்படுகிறது. மஹத்தத்வத்தை புத்திதத்துவமென்று சொல்லுவர். ‘மஹத்து’ அஹங்காரமாகப் பரிணமிக்கையில், ஜீவர்கள் அதனுடன் கலந்து ‘நான்’ ‘அஹம்’ என்று ப்ரக்ருத்யாத்மபுத்தியைச் செய்கிறார்கள். அதனால், அந்த விகாரத்திற்கு ‘அஹங்காரம்’ என்பது பெயர். ப்ரக்ருதியினிடம் நானெனும் புத்தியைச் செய்விப்பது. ‘மஹான்களான’ ஆசிரியரின் சேர்க்கையால், உயிரான ப்ரஹ்மம் வரையில் ‘அஹம்’ எனும் புத்தி உள் செல்லுகிறது. ‘சாஸ்த்ரத்ருஷ்டி’யெனும் ஜஞானமும் ஏற்படுகிறது. “கடல்ஞாலம் செய்தேனும் யானே யென்னும்” என்பதுபோன்ற அநுபவம் உண்டாகிறது. அத்யந்தம் நீசத்தன்மையால் அப்படி உண்டாகும் அஹங்காரம் உயர்ந்தது. ஜடப்ரக்ருதியினிடமும், ஸ்வதந்த்ரனாகத் தன்னை மதித்துக் கேவலம் தன்னிடமும் ‘அஹம்’ என்னும் எண்ணம் விலக்கத்தக்கது. ‘ப்ரலீயதே’ என்றோர் பாடம். (87)

𑌸𑍍𑌵𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌾𑌤𑍇𑌽𑌪𑌿 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑍇 𑌕𑍍𑌵𑌚𑌨 𑌶𑍋𑌭𑌨𑌃 ।
𑌤𑌤𑍍𑌰 𑌹𑍃𑌦𑍍𑌯𑌭𑌿𑌮𑍁𑌖𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌝𑌟𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 ॥

ஸ்வத்ருஷ்டிப்ரதிகாதேऽபி ஸ்வச்சே க்வசந சோபந: ।
தத்ர ஹ்ருயபிமுக: ஸ்வாத்மா ஜடித்யேவ ப்ரகாசதே ॥ (88)

(ப-ரை) 𑌸𑍍𑌵𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌾𑌤𑍇𑌽𑌪𑌿 [ஸ்வத்ருஷ்டிப்ரதிகாதேऽபி] - தன்கண் கிரணங்கட்குத் தடங்கல் ஏற்பட்டாலும், (தன்ஸ்வரூபத்தையே பார்த்துக்கொள்ளக் கூடாமலிருந்தும்,) 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑍇 𑌕𑍍𑌵𑌚𑌨 [ஸ்வச்சே க்வசந] - ஸ்படிகம்போல சுத்தமான குருவினிடம், (கண்ணாடியில்,) (அவருடைய ஜ்ஞான ஒளி தனக்குப் பிரதிபலித்து,) 𑌤𑌤𑍍𑌰 𑌹𑍃𑌦𑍍𑌯𑌭𑌿𑌮𑍁𑌖𑌃 [தத்ர ஹ்ருயபிமுக:] - ஸ்வச்சமான அப்பெரியாரிடம் அபிமுகனாய்க் கிட்ட நெருங்கினால், 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 [ஸ்வாத்மா] - தன்னுருவம், தன் ஸ்வரூபம், தன் உயிரான பரஸ்வரூபம், 𑌝𑌟𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 [ஜடித்யேவ] - உடன்காலிலேயே, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 [ப்ரகாசதே] - ப்ரகாசிக்கும். ‘ப்ரதிகாதோபி’ என்றும் பாடம். (தடங்கலும்.)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— தன் முகம் முதலியதைத்தானே பார்த்துக் கொள்ளுவது ஸாத்யமன்று. தன்முகத்தைப் பார்க்கவேண்டுமாயின், ஸ்வச்சமான ஓர் கண்ணாடிக்கு அபிமுகமாக நெருங்கி, தன்கண்களை அதனிடம் செலுத்தவேண்டும். தன் கண் தேஜஸ்ஸு அக்கண்ணாடியில் பட்டுத் திரும்பி முகத்தைக் கண்ணாடிக்கு எதிர்ப்புறத்தில் பார்க்கிறது என்பர். நம் உருவத்தைப் பிரதிபலிக்கச் செய்வது நமக்கு அபிமுகமான ஸ்வச்சக்கண்ணாடி. நம்முடைய உடம்பு ப்ரதிபலிப்பது கண்ணாடியில். கண்ணாடிபோன்ற ஸ்வச்சமான ஆசிரியரிடம் நாம் அபிமுகமாகச் சென்று அவர்கள் ஆபிமுக்யத்தை ஸம்பாதித்தால், அவர்கள் கடாக்ஷம் நம்பேரில் விழுந்து, அவர் ஜ்ஞானக் கண்ணாடியை நமக்கு க்ருபையால் காட்டவே, நம்முடைய ஆத்மாவும், நம் ஆத்மாவுக்கும் உயிரான பரமாத்மாவும் நமக்கு ப்ரதிபலிக்கும். அவர்கள் கொடுக்கும் ஜ்ஞானக் கண்ணைக்கொண்டு நாம் இவ்வாத்மாக்களைப் பார்க்கலாம். அவர்கள் கொடுக்கும் ஜ்ஞானத்தாலும், அவர்கள் அருளாலும் நம் மனம் ஸ்படிகம்போல ஸ்வச்சமாகி, அதில் உள்ள நம் ஸ்வரூபத்தையும், உள் பரமாத்ம ஸ்வரூபத்தையும் ஸாக்ஷாத்கரிப்பது எளிதாகும். சுத்தமானமனதை திவ்யசக்ஷுஸ் என்று உபநிஷத்துப் பேசுகிறது. தன் முகத்தை வேறு ஒரு ஸ்வச்சமான கண்ணாடிபோன்ற ஸாதனம் இல்லாமல் தானுகப் பார்க்கமுடியாது. அப்படியே ஆசானென்னும் ஸ்வச்சமான ஸாதனமன்னியில் ஜீவபரஸ்வரூபங்களைத் தரிசிக்கமுடியாது. கண்ணாடிக்கு அபிமுகமாயும் அருகினும் நாம் செல்லவேண்டியது போல, குருவையும் உபாஸனம் செய்து, அவரிடம் ஆபிமுக்யத்தை வஹித்து, அவர் ஆபிமுக்யத்தையும் பெறவேணும். (88)

ஶிக்ஷகே ஹரிதாகாரோ மேரௌ நீலதநுர்த்விஜ: ।
அபூர்வவர்ணவாந் பாதி ஸத்யநிஷ்டே ச கௌஶிக: ॥

சிக்ஷகே ஹரிதாகாரோ மேரௌ நீலதநுர்த்விஜ: ।
அபூர்வவர்ணவாந் பாதி ஸத்யநிஷ்டே ச கௌசிக: ॥ (89)

(ப-ரை) ஹரிதாகார: [ஹ்ரிதாகார:] - பசுமைநிறமான, த்விஜ: [த்விஜ:] - கிளி, (பக்ஷி,) ஶிக்ஷகே [சிக்ஷகே] - பேச்சுப் பழக்கி வைப்பவனருகில், அபூர்வவர்ணவாந் [அபூர்வவர்ணவான்] - அகர முதலிய எழுத்துக்களை உச்சரிக்கத் தெரிந்ததாக, பாதி [பவதி] - ஆகிறது. நீலதநு: [நீலதநு:] - கருநிறமான, த்விஜ: [த்விஜ:] - காகம், (பக்ஷி,) மேரௌ [மேரௌ] - மேருமலையில், அபூர்வவர்ணவாந் பாதி [அபூர்வவர்ணவாந் பாதி] - புதுத் தங்கவர்ணமாக ஆகிறது. கௌஶிக: [கௌசிக:] - விச்வாமித்ரர், ஸத்யநிஷ்டே [ஸத்யநிஷ்டே] - வஸிஷ்டரிடம், அபூர்வவர்ணவாந் பாதி [அபூர்வவர்ணவாந் பாதி] - தனக்கு மேல்பட்டதில்லாத முதல் வர்ணத்தோராக ஆகிறார். கௌஶிக: [கௌசிக:] - இந்த்ரன், ஸத்யநிஷ்டே [ஸத்யநிஷ்டே] - கௌதமரிடம், அபூர்வவர்ணவாந் பாதி [அபூர்வவர்ணவான் பாதி] - அகரத்தைமுன்னுடைய 'வர்ண' என்னும் சப்தத்திற்கு, அதாவது—'அவர்ண' என்னும் பதப்பொருளுக்கு யோக்யமாவார். 'அவர்ண' என்பதற்கு 'நிந்தை', 'அபவாதம்' என்பது பொருள்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஆசிரியனுடைய ஆபிமுக்யத்தாலும், கடாக்ஷத்தாலும், சிக்ஷையாலும் ஜ்ஞானத்ருஷ்டி வரும் என்றார். இதென்ன விந்தை? கிளிப்பிள்ளைகூடச் சொற்களைச் சிக்ஷகனிடம் கற்றுக்கொண்டு பேசும். சிக்ஷகன் சப்தங்களின் எதிரொலி போன்றது. நாம் பேசும் வேதாந்தவாதமெல்லாம் ஆசான் நமக்குக் கிளிப்பிள்ளைக்குப் பழக்கிவைத்ததுபோலச் சொல்லிவைத்தது என்று நாம் அநுஸந்திக்கவேண்டும். "சதுதூஷணியைக் கிளியைப்போல ஸபைகளில் உச்சரித்தால் போதும்" என்றார் அந்த க்ரந்தத்தின் துடக்கத்தில். ஸ்வர்ணமயமான மேருவின் ஸமீபத்தில் காகமும் பொன்நிறமாகும். நிறம் மாறுவதென்ன விந்தை. மாருத ஜாதியும் மாறுமென்பதற்குவிச்வாமித்ரத்ருஷ்டாந்தத்தைக் காட்டுகிறார். அப்படி மாறியதும், வஸிஷ்டருடைய ஆசீர்வாதவாக்கின் ஸத்யபலத்தாலென்கிறார். விச்வாமித்ரர் கடுந்தவமும் போதாது; வஸிஷ்டருடையஆசீர்வாதத்தின் ஸத்யமஹிமைபலமே பலம். இந்த்ரன் கௌதமரிடம் அபசாரப்பட்டதால், சாச்வதமான நிந்தை (அபவாதம்) கிடைத்தது. ஆசிரியர் கடாக்ஷத்தால் தோல் கண்ணல்லாத ஜ்ஞானக்கண் கிடைக்கும்; கௌதமர் நிக்ரஹத்தால் ஆயிரம் தோல்கண் கிடைத்தது. காகத்திற்கு ஒரு கண்போனது ஹிதமாயிற்று என்பர்.

ஆயிரம்கண் கிடைத்தது இன்னும்அபாயத்திற்கே இடமாயிற்று. ஸத்துக்களை ஆச்ரயிப்பதால் அநுக்ரஹத்தையும் காட்டி, அபசாரத்தால் வரும் தீங்கையும் காட்டுகிறார். (89)

[illegible]

களங்கினி ஜடே (ஜலே) க்வாபி ஸௌரம் ப்ரதிபலந் மஹ: l
தமோபஹத்வம் தநுதே ஸம்ருத்திம் ச திநே திநே ll (90)

(ப-ரை) [illegible] [க்வாபி] - ஏதோ ஒரு, [illegible] [களங்கினி]-களங்கத்தைஉடைய, (பழிப்பையுடைய,) [illegible] [க்வாபி] ஏதோ ஒரு, [illegible] ([illegible]) [ஜடே] (ஜலே) - அறியாதவனிடமும்,(ஜலமயமான சந்த்ரனிடமும்,) [illegible] [ப்ரதிபலன்]- ப்ரதிபலிக்கும், (புகுந்து ப்ரகாசம் கிளம்பும்,) [illegible] [ஸௌரம்] - ஸூர்யனுடைய, (ஸூர்யனென்னும் ஆசிரியருடைய,) [illegible][மஹ:]- தேஜஸ், (ஜ்ஞானஒளி,) [illegible] [தமோபஹத்வம்]- இருட்டைப்போக்கும் தன்மையை, (பிறர் அஜ்ஞானத்தைப்போக்கும் ஸாமர்த்யத்தை,) [illegible] [தநுதே] - விஸ்தாரப்படுத்துகிறது. [illegible] [ச] - அதுவுமன்னியில், [illegible] [திநே திநே] - நாள்தோறும், [illegible] [ஸம்ருத்திம்] - மேல்மேல் பெருக்கை, [illegible] (தநுதே) - பரப்புகிறது.

அவதாரிகைகளிடன் தாத்பர்யங்கள்— ஆசிரியரைப் பணிவதால் அறிவிலிக்கும், அறிவாளிக்கும் ஆசான்ஜ்ஞானவொளி அவனிடமும் ப்ரதிபலிக்கும் என்றார். அறியாதவனை விவேகியாகச் செய்வதுமன்றி, அவனை உலகத்தின் இருட்டைப் போக்கும் ஜகத்குருவாக்குமென்கிறார். ஆசிரியனை ஸூர்யன் என்பர். ஸௌரம் மஹ: என்பது ஸூர்யனுடைய தேஜஸ்ஸையும், ஆசானுடைய ஜ்ஞானச் சுடரையும் சொல்லும். ஸூர்யனுடைய ஒளி ஜலமயமான சந்த்ரமண்டலத்தில் ப்ரகாசித்து அவனை ஒளியாக்கி உலகத்தினிருட்டைப் போக்கும் ஸாமர்த்யத்தைச் சந்த்ரனுக்கு அளிக்கிறது. ஆசிரியன் ஜ்ஞானம் ஜடனாகிய சிஷ்யனிடம் புகுந்துகொண்டு அவனை உலகத்தின் அஜ்ஞானப் பொருளைப் போக்கும் ஜகத்குருவாக்கும். சிஷ்யனாயிருப்பவன் அறிவிலியானாலென்ன ? அவன் சந்த்ரனைப்போல களங்கம் (தோஷம்) உடையவனாயிருந்தாலென்ன ? அவனைச் சுத்தனாக்கி ஜ்ஞானியாக்கி உலகாசார்யனாகச் செய்யும் ஆசான் க்ருபை என்கிறார். உலகத்திருட்டைப் போக்கும் சக்தியைக் கொடுப்பது மட்டுமன்று, ஒவ்வொருநாளும் ஒரு கலை வ்ருத்தியடைந்து, பூர்ணமாகும்படி செய்யுமென்றும் இந்த த்ருஷ்டாந்தம் காட்டுகிறது. புருஷனை ஷோடசகலன் பதினாறு கலையுள்ளவன் என்று உபநிஷத்து பேசுகிறது. (90)

[illegible]

ஸ்வத: சைதந்யஹீனஸ்ய விஷமச்சித்ரபாகின: l
கஸ்யசித் ப்ராஜ்ஞமூலா: ஸ்யு: புருஷார்த்தப்ரவ்ருத்தய: ll (91)

(ப-ரை) [illegible] [ஸ்வத:] - தனக்காக, ஸ்வயமாய், [illegible] [சைதந்யஹீனஸ்ய] - அறிவில்லாத, (விவேகம் இல்லாத,) [illegible] [விஷமச்சித்ரபாகின:] - முக்குணங்களின் ஏற்றத் தாழ்ச்சி என்னும் விகாரத்தை அடைந்த மூலப்ரக்ருதிக்கு, (காமக்ரோதாதிகளால் வைஷம்யமுமுள்கலஹமுமுடைய,) ஒன்பது த்வாரங்களையுடைய மானிடதேஹமுள்ள, [illegible] [கஸ்யசித்] - ஒரு ஜடமான மூலப்ரக்ருதிக்கு, (யாரோ ஒரு பாக்யவானுக்கு,) [illegible] [புருஷார்த்தப்ரவ்ருத்தய:] - ஜீவன்களுடைய ப்ரயோஜனத்திற்காகச் செய்யும் ப்ரவ்ருத்திகள், (மோக்ஷம்முதலிய புருஷார்த்தம் அடைவதற்குரிய உபாயப்ரவ்ருத்திகள்), [illegible] [ப்ராஜ்ஞமூலா:] - ப்ராஜ்ஞனென்னும் பரமாத்மாவின் மூலமாக, (ப்ராஜ்ஞரான ஆசிரியரின் மூலமாக ஏற்படும்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஸத்துக்களை ஆச்ரயிப்பதால், அவர்கள் நமக்கு ஜ்ஞானத்தைக் கொடுத்து நம்மை ஸத்துக்களாக, (உயிருள்ளவராக)ச் செய்கிறார்கள், முன் பிறந்திராத நம்மை ஜ்ஞானப்பிறவி தந்து, பிறக்கச் செய்கிறார் என்றார். ப்ரக்ருதியில் ஏகதேசமான சந்த்ரமண்டலம் முதலியது ஸூர்யனுடைய ஒளியைப் பெற்று, ஒளி பரப்பி இருளை நீக்குவதையும் காட்டினார். ஜடமான ப்ரக்ருதி முழுவதும், ப்ரளயத்தில் முக்குணங்களும் ஸமமாக இருந்து இல்லாததுபோல, உருவும்,

சேஷ்டை, பேர், ஊர் முதலியதில்லாமல் கிடந்தது. அதில் ப்ராஜ்ஞனென்னும் பரமாத்மாவால் குணவைஷம்யம் உண்டாகி, ஜீவர்கள்ப்ரயோஜனத்திற்காக, பலவிகாரங்களாக விகாரப்ரவ்ருத்திகள் உண்டாகிறது என்று இங்கே காட்டுகிறார். 'அஸத்' என்று சொல்லக்கூடியதாயிருந்த ப்ரக்ருதி முழுவதும் (உலகம் முழுவதும்) ப்ரஹ்மாதீனமாக ஸ்ருஷ்டிவிகாரங்களில் ப்ரவ்ருத்திக்கிறது என்கிறார். ஸாங்க்யர் ஜடப்ரக்ருதி தானாகவே ஜீவராசிகளுடைய போகமோக்ஷங்களுக்காக ப்ரவ்ருத்திக்கிறது என்பர், தானாக ப்ரவ்ருத்திக்கமாட்டாது. ஸத்தென்றும், ப்ராஜ்ஞனென்றும் சொல்லப்படும் பரமாத்மாவின் மூலமாக அவன் ஸங்கல்ப பலத்தால் ஜடப்ரக்ருதியில் ப்ரவ்ருத்திகள் உண்டாகிறதென்று வேதாந்தஸித்தாந்தத்தைக் காட்டுகிறார். 'ஸந்மூலா:' என்பது உபநிஷத்து. இங்கே 'ப்ராஜ்ஞமூலா:' என்கிறார். 'தததீனத்வாத்' என்ற ஸூத்ரத்தால் ப்ரஹ்மாதீனமாகத்தான் ப்ரக்ருதியின் ப்ரவ்ருத்திகள் என்று காட்டி, அதே இடத்தில் 'ப்ராஜ்ஞோ ஹி' என்று ஸத்தென்னும் ப்ரஹ்மத்தை ஸூத்ரகாரர் 'ப்ராஜ்ஞர்' என்று பேசியதை இங்கே அனுஸரித்து ப்ராஜ்ஞமூலா: என்கிறார். ப்ராஜ்ஞரான ஆசிரியரும், பொருளொன்றில்லாதவரைப் பொருளாக்குகிறார். அவர்களைப் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திற்கு உபாயத்தில் ப்ரவ்ருத்திக்கச் செய்கிறார். ஆசார்யப்ராப்தியும் ப்ராஜ்ஞனென்னும் பரமாத்மாவின் மூலமாகத்தான் கிடைக்கும். (91)

மஹாந்தம் புருஷம் ப்ராப்ய கஂசித் ஸத்வப்ரவர்த்தகம் ।
ப்ரதிபுத்தோ ஜநஸ்தேந பரமம் ஸாம்யமஶ்நுதே ॥ ௯௨ ॥

மஹாந்தம் புருஷம் ப்ராப்ய கம்சித் ஸத்த்வப்ரவர்த்தகம்]
ப்ரதிபுத்தோ ஜனஸ்த்தேன பரமம் ஸாம்யமச்நுதே]] (92)

(ப-ரை) ஸத்வப்ரவர்த்தகஂ [ஸத்துவப்ரவர்த்தகம்] - ஸத்துவகுணத்தைத் தலையெடுக்கச் செய்யும்படி, கஂசித் [கஞ்சித்]- ஒரு, (அருமையான), மஹாந்தஂ புருஷஂ [மஹாந்தம் புருஷம்] - மஹாபுருஷனை, (ஆசார்யனை, பகவானை,) ப்ராப்ய [ப்ராப்ய]-அடைந்து, ப்ரதிபுத்த: [ப்ரதிபுத்தை:] - ஜ்ஞானம் பிறந்த, ஜந:[ஜந:]-ஸாமான்யமானவனும், (புதுஜ்ஞானப் பிறவி பிறந்தவன், தேந [தேன]-அவனோடு, பரமஂ [பரமம்]-எல்லையற்ற, ஸாம்யஂ [ஸாம்யம்] - ஒற்றுமையை, (ஸமானத் தன்மையை, அஶ்நுதே [அச்னுதே] - அடைகிறான்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— 'ஸத்' என்பது ப்ரஹ்மத்தையும், ப்ரஹ்மவித்தான ஆசிரியரையும் சொல்லலாம். 'மஹாபுருஷன்' என்று இருவரையும் சொல்லலாம். 'ஸமசித்தர்' என்பதும் இருவருக்கும் பொது. தேவனைப்போல ஆசிரியரை உபாஸிக்கவேணும். அஜ்ஞான இருட்டைப் போக்குதல், பாபத்தைப் போக்குதல், தன்னோடு ஸமமாகச் செய்தல், இனிப் பிறவியைத் தொலைக்கும் ஜ்ஞானப் பிறவியை யளித்தல், முதலிய குணங்கள் இருவருக்கும் பொதுவாதலால், தேவனைப்போல ஆசிரியரையும் உபாஸிக்கவேணும் இந்த குணங்களெல்லாம் இருவருக்கும் பொது என்று மஹாபுருஷபத்ததி முதல் காட்டிவருகிறார். 'ஜன:' என்பதால் ஸாமாந்யஜனத்தைச் சொல்லும். ஸாமான்யன்கூட ஆசார்யாச்ரயத்தால், பகவதாச்ரயத்தால் அவருக்கு மிகவும் ஸமனாவான். ச்ருதிபதங்களை இந்த ச்லோகத்தில் விசேஷமாக அமைத்திருக்கிறார். 'மஹான் ப்ரபுர்வை புருஷ: ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக:', 'நிரஞ்ஜன: பரமம் ஸாம்யமுபைதி' என்பது ச்ருதிகள். 'ஜன:' என்பது பிறப்பவனைச் சொல்லும். 'ப்ரதிபுத்தனாக, ஜ்ஞானோதயம் பெற்றவனாக, புதுப்பிறவி பிறந்தவன்' என்பது ரஸம். (92)

ஸூத்ரஂ ரத்நஸமாவேஶாத் ஶர்ம ஸத்பதஸஂஶ்ரயாத் ।
தத்பேதேந க்ருஹ்யேத த்ருணமப்யஸ்த்ரமந்த்ரணாத் ॥ ௯௩ ॥

ஸூத்ரம் ரத்னஸமாவேசாத் சர்ம ஸத்பதஸம்ச்ரயாத்]
தத்பேதேந க்ருஹ்யேத த்ருணமப்யஸ்த்ரமந்த்ரணாத்]] (93)

(ப-ரை) ரத்நஸமாவேஶாத் [ரத்னஸமாவேசாத்] - ரத்னங்கள் கோர்த்து அதோடுகூடியிருப்பதால், ஸூத்ரஂ [ஸூத்ரம்] - நூலும், ஸத்பதஸஂஶ்ரயாத் [ஸத்பதஸம்ச்ரயாத்]- பெரியோர் திருவடியை ஆச்ரயித்ததால், ஶர்ம [சர்ம] - தோலும், (பாதரக்ஷையும்), அஸ்த்ரமந்த்ரணாத் [அஸ்த்ரமந்த்ரணாத்] - அஸ்திரமாகும்படி ஜபிக்கப்பட்ட மந்த்ரஸம்பந்தத்தால், த்ருணமபி [த்ருணமபி] - புல்லும், தத்பேதேந [ததபேதேன] - ஸம்பந்தப்பட்ட அந்தந்த பொருளைப்போலவே அதற்கு ஸமமாக, க்ருஹ்யேத [க்ருஹ்யேத] - மதிக்கப்படும், (தரிக்கப்படும்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— பூவோடு நாறும் மணம் பெறும்' என்பது பழமொழி. பூவோடு நாறும் தலையிலும் கழுத்திலும் ஏறும். பூ வாடினதும் பூவோடு தூக்கி வாரி எரியப் படும். அது ஸ்வல்பநாழிகை காலம்மட்டுமுளது. நூலில் ரத்னங் கள் கோர்க்கப்பட்டால் கழுத்தில் வெகுகாலம் இருக்கலாம். "ஸூத்ரத்தில் ரத்னகணங்கள்போல எல்லாம் என்னிடம் கோர்க்கப்பட்டு என்னால் ஒன்று சேர்த்துத் தாங்கப்படுகின்றன" என்றார் பெருமாள். தம்மை நூலுக்கொப்பிடுவதால் தம் வின யத்தையும் ஒருவாறு காட்டினார். பாதரக்ஷைதோலும் பெரியோர் தரித்து அவர்கள் திருவடி ஸம்பந்தத்தால் நம் தலையிலேறும். அவர்கள் திருவடியோடு ஸமமாக மதிக்கப்படும். திருவடியைத் தலையில் தாங்கமுடியாவிடினும், ரக்ஷை தலையால் சுமக்கப்படும். 'ஆர்யபாதௌ இமௌ மதௌ' என்று ராகவபாதுகைகள் அவர் திருவடியாகவே மதிக்கப்பட்டன. பெருமாள் திருமுடிக்குக் கிடைக்கும் அபிஷேகம் ரக்ஷைக்குக் கிடைத்தது. 'த்ருணஸ்யை வாஸ்த்ரத்வம்'. மந்த்ரப்ரபாவத்தால், மந்த்ராபிமந்த்ரணஸம்பந் தத்தால் புல்லும் அஸ்த்ரம்போலாகும். மந்த்ரிக்கப்பட்ட புல் லையும் கண்டு பயப்படவேண்டும். நாம் புல்போல அல்பராயினும், ஆசார்யனுடைய மந்த்ரஸம்பந்தத்தால் பெருமையை அடைய லாம். மஹதாச்ரயத்தின்வலுவால், மஹத்தான பொருளைப்போல சிறப்பு வந்தாலும், அதுவே ஆவதில்லை. ப்ரஹ்மத்தை ஆச்ரயிப் பதால் ப்ரஹ்மமேயாவதில்லை. இங்கே 'அபேதேன' என்பது எப் படி ஐக்யமல்லவோ, அப்படித்தான் ப்ரஹ்மத்தோடு அபேதமும். பகவதாச்ரயத்தால் பாகவதர் பூஜ்யர்; பாகவதாபசாரத்திற்கு நடுங்கவேணும். (93)

ஏகயைவ ஗ுரோர்த்ருஷ்ட்யா த்வாப்யாம் வாபி லபேத யத் ।
ந தத்திஸ்ருபிரஷ்டாபிஸ்ஸஹஸ்ரேணாபி கஸ்யசித் ॥ ௯௪ ॥

ஏகயைவ குரோர் த்ருஷ்ட்யா த்வாப்யாம் வாபி லபேத யத் I
ந தத்திஸ்ருபிரஷ்டாபிஸ்ஸஹஸ்ரேணபி கஸ்யசித் II (94)

(ப-ரை) ஗ுரோஃ [குரோ:] - குரு அனுக்ரஹிக்கும், (குருவினுடைய,) ஏகயைவ த்ருஷ்ட்யா [ஏகயைவத்ருஷ்ட்யா]- வித்யையென்னும் ஒரே கண்ணால், (த்ருஷ்டியாலாவது,) த்வாப்யாம் வாபி [த்வாப்யாம் வாபி] - (குருவின்) இரண்டு கண்க

ளாலாவது, (அநுக்ரஹத்தோடு கடாக்ஷிக்கப்படுவதாலாவது,) யத் [யத்] - எதை, (என்ன பயனை), லபேத [லபேத] - அடை வனோ, தத் [தத்] - அதை, திஸ்ருபிஃ [திஸ்ருபி:] - மூன்று கண்களாலும், (ஈச்வரனாலும்), அஷ்டாபிஃ [அஷ்டாபி:] - எட்டுக் கண்களாலும், (சதுர்முகப்ரஹ்மாவாலும்). ஸஹஸ்ரேணாபி [ஸஹஸ்ரேணபி] - ஆயிரங்கண்களாலும், (ஸஹஸ்ராக்ஷனான இந் திரனாலும்,) கடாக்ஷிப்படுவதால், ந (லபேத) [ந] (லபேத) - பெறமாட்டான். (அவர்களாலுமடையமுடியாது).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்- ப்ரஹ்மத்திற்கு ஸமம் போல மதிக்கப்பட்டு உபாஸிக்கவேண்டிய ஆசிரியர் கடாக்ஷத்தி னால் கிடைக்கும் க்ஷேமம் (மோக்ஷம்) அதிகாரிபுருஷரான தேவர் களாலும் கிடையாதென்கிறார். மோக்ஷம் ஜனார்த்தனனிடமிருந்து கிடைக்கும். மோக்ஷமளிக்கும் அதிகாரிமுகுந்தர். 'சிறு மானிடர்' என்னும் சிறந்த ஆசிரியரின் இரண்டு கண்களின் கடாக்ஷத்திற்கு இத்தனை மஹிமை. அவர்களிரண்டுகண் கடாக்ஷத்தால் நமக்கு 'திவ்யத்ருஷ்டி' என்னும் ஓர் விலக்ஷணமான கண் கிடைக்கிறது. 'திவ்யம் ததாமி தே சக்ஷு:' என்றபடி பகவத்ஸ்வரூபத்தை ஸேவிக்க யோக்யமான திவ்யசக்ஷுஸ்ஸு பகவானாலேயே கொடுக் கப்படவேண்டும். அல்லது ஸஞ்ஜயருக்கு வ்யாஸர் கொடுத்தது போல, ஆசானால் கொடுக்கப்படவேணும். ஆசான் கடாக்ஷமன் னியில் பகவானும் கொடுக்கமாட்டார். ஆசான் கடாக்ஷிப்பதற் குமடி ஜாயமானதசையில் மதுஸூதனன் கடாக்ஷம். கீதையில் 'திவ்யசக்ஷுஸ்ஸை உனக்குத் தானம் செய்கிறேன்' என்று வாக் களித்த மதுஸூதனன் கடாக்ஷம் வேணும் என்பதைக் காட்ட, 'யம் பச்யேன் மதுஸூதன:' என்று ப்ரமாணம் மதுஸூதன னைக்குறிப்பிட்டது. (94)

நத்யாஸ்தோயம் த்ரிதஶஸரிதா ராஜநீதிஸ்ஸுகீர்த்யா
காவ்யாலாபஸ்த்ரியுககதயா காயவாந் ஆத்மபுத்ரா ।
தாரவ்ருத்திஃ ஸுஜநநயியா ஜந்துஹிம்ஸா ச வேத
பூஜார்ஹீ நஃ வாரஹி தவிஶா ஸம்ஶதஸூக்திஶேதி ॥ ௯௫ ॥

நத்யாஸ்தோயம் த்ரிதசஸரிதா ராஜநீதிஸ்ஸுகீர்த்யா
காவ்யாலாபஸ்த்ரியுககதயா காயவான் ஆத்மபுத்யா I

தாரப்ரீதி: ப்ரஜனனதியா ஜந்துஹிம்ஸா மகேன
ப்ரஜ்ஞாஹீன: பரஹிதவிதா ஸங்கத: சுத்திமேதி ॥ (95)

(ப-ரை) 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌸𑌰𑌿𑌤𑌾 [த்ரிதசஸரிதா] - தேவநதியான கங்கையோடு, 𑌸𑌙𑍍𑌗𑌤𑌃 [ஸங்கத:] - சேர்ந்த, 𑌨𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍋𑌯𑌂 [நத்யாஸ்தோயம்] - ஆற்றின் ஜலமும், 𑌸𑍂𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 [ஸூகீர்த்யா] - நல்ல புகழோடு, (கூடிய) 𑌰𑌾𑌜𑌨𑍀𑌤𑌿𑌃 [ராஜநீதி:] - மன்னர் செங்கோல் முறையும், 𑌤𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌕𑌥𑌯𑌾 [த்ரியுககதயா] - ஆறு குணங்களை உடைய பகவானுடைய சரித்ரத்தோடு, (சேர்ந்த) 𑌕𑌾𑌵𑍍𑌯𑌾𑌲𑌾𑌪𑌃 [காவ்யாலாப:] - காவ்யசப்தங்களும், 𑌆𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 [ஆத்மபுத்யா] - பரமாத்மவிஷயமான ஜ்ஞானத்தோடு, (கூடி,) 𑌕𑌾𑌯𑌵𑌾𑌨𑍍 [காயவாந்] - தேஹம் படைத்த மனிதனும், 𑌪𑍍𑌰𑌜𑌨𑌨𑌧𑌿𑌯𑌾 [ப்ரஜனனதியா] - ஸந்ததியுண்டாவதற்கென்ற புத்தியோடு, (கூடிய) 𑌦𑌾𑌰𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌃 [தாரப்ரீதி:] - பத்நியிடம் ப்ரீதியும், 𑌮𑌖𑍇𑌨 [மகேன] - வேள்விஸம்பந்தத்தோடு (கூடிய) 𑌜𑌨𑍍𑌤𑍁𑌹𑌿𑌂𑌸𑌾 [ஜந்துஹிம்ஸா] - ப்ராணிஹிம்ஸையும், 𑌪𑌰𑌹𑌿𑌤𑌵𑌿𑌦𑌾 [பரஹிதவிதா] - பிறர் ஹிதத்தை அறிந்த ஆப்தரோடு, (சேர்ந்து) 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌹𑍀𑌨𑌃 [ப்ரஜ்ஞாஹீன:] - ஸ்வயமாக ஜ்ஞானமில்லாதவரும், 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 [சுத்திம்] - சுத்தியை, 𑌏𑌤𑌿 [ஏதி] - அடைகிறார். (அடைகிறது).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— அடுக்கடுக்காய்ப் பல த்ருஷ்டாந்தங்களை இங்கே காட்டுகிறார் ஆற்றுஜலங்கள் கங்கையில் சேர்ந்தால், கங்கைக்கு ஸமமாகப் புனிதமாகும். கெருத் தண்ணீரும் கங்கையில் சேர்ந்துவிட்டாலப்படியே சுத்தமாகும். குடிகளின் ப்ரீதிக்ஷேமங்களை ஸம்பாதிப்பதால், எங்கும் பரந்த கீர்த்தியோடு கூடினால், கபடதந்த்ரங்களோடு கூடிய ராஜநீதியும் சுத்தமாகும். 'காவ்யாலாபங்களைத் தள்ளவேண்டும்' என்பர். ஆனால், பகவத்பாகவதகதைகளோடு கூடிய காவ்யங்கள் யசஸையும், ப்ரஹ்மானந்தம் என்ற பரநிர்வ்ருதியையும் கொடுக்கும். அனந்தனுடைய யசஸ்ஸினால் முத்ரிதமான ப்ரதிச்லோகம் அபத்தமான காவ்யமும் ஜனங்கள் பாபத்தைப் போக்கும் சுத்தியை உடையதென்பர். 'யுகம்' என்பது இரட்டையைச் சொல்லும். 'த்ரியுகர்' என்பது (மூவிரண்டு) ஆறு குணங்களை உடைய பகவா

னைச் சொல்லுகிறது. ஆத்மஜ்ஞானத்தால் தேஹியென்னும் க்ஷேத்ரஜ்ஞனுக்கு உயர்ந்த சுத்தி ஏற்படும். 'க்ஷேத்ரஜ்ஞனுக்கு (ஜீவனுக்கு) ஈச்வரஜ்ஞானத்தால் பரமமான விசுத்தி வருமென்பது பெரியோர் தீர்மானம்' என்பது யாக்ஞவல்க்யஸ்ம்ருதி. இங்கும் ஆத்மா என்பதால் 'ஈச்வரன்' என்ற பரமாத்மாவைக்கொள்ளவேணும். 'ப்ரஜையைஅடையவே க்ருஹமேதிகளாக இருந்தனர் ரகுகுல மன்னர்' என்பது ரகுவம்சம். 'ப்ரஜநநம் ஸந்தானம்' என்றவிடம் போல, ப்ரஜனனம் என்பது ஸந்ததி' வம்சப்ரதிஷ்டையைச் சொல்லுகிறது. 'தர்மத்திற்கு விரோதமல்லாத காமமும் நானே' என்றார் பகவான். 'யஜ்ஞத்தில் வதமும் வதமாகாது' என்பர். 'அது அசுத்தமன்று என்று வேதமோதுகிறது' என்று ப்ரஹ்ம ஸூத்திரம். பசுக்களுக்கு ஸமானமாய், ஜ்ஞானஹீனராயிருப்பினும், ஸ்வபரஹிதபரமான தேசிகரை ஆச்ரயித்து சுத்தியை அடைவான். 'வாஸுதேவன் பாதஸலிலம்போல் அவர் கதையும் மூவரைச் சுத்தராக்கும்', 'ஆஸத்கீர்த்தனத்தால் சுத்தமான வாக்கை சௌரிகதாலாபகங்கையால் புனிதமாக்குவோம்' என்று ருஷிகள். (95)

𑌵𑌿𑌭𑍁𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑍍𑌯𑌤𑌨𑍁𑌤 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 𑌵𑍍𑌰𑌜𑌭𑍁𑌵𑌾𑌂
𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍋𑌽𑌸𑍌 𑌧𑍂𑌰𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑌜𑌨𑌿 𑌸𑍂𑌤𑌶𑍍𑌚 𑌭𑌜𑌤𑌾𑌂 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑍌𑌜𑍍𑌝𑌤𑍍 𑌸𑍍𑌵𑌪𑌦𑌤𑌟𑌿𑌨𑍀𑌸𑍂𑌨𑍁𑌸𑌮𑌰𑍇
𑌮𑌹𑌦𑍍𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌯𑍋 𑌵𑌹𑌤𑌿 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂 𑌤𑌦𑌧𑌿𑌕𑌮𑍍 ॥

விபுர் பந்தம் ப்ராப்ய வ்யதநுத விமுக்திம் வ்ரஜபுவாம்
ஸ்வதந்த்ரோஸௌ தூர்த்த: ஸ்வயமஜநி ஸூதச்ச பஜதாம் ।
ப்ரதிஜ்ஞாம் ஸ்வாமௌஜ்ஜத் ஸ்வபததடிநீஸூநுஸமரே
மஹத்யோகாத் ப்ராயோ வஹதி மஹிமானம் ததிகம் ॥

(ப-ரை) 𑌵𑌿𑌭𑍁𑌃 [விபு:] - ப்ரபுவான ஸர்வவ்யாபியான, (கண்ணன்,) 𑌬𑌨𑍍𑌧𑌂 [பந்தம்] - கட்டுப்படுதலை, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 [ப்ராப்ய,] அடைந்து, 𑌵𑍍𑌰𑌜𑌭𑍁𑌵𑌾𑌂 [வ்ரஜபுவாம்] - இடைச்சேரியில் பிறந்தவர்க்கு, 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 [விமுக்திம்] - மோக்ஷத்தை, (பந்தத்தின் ஆத்யந்திகமான மோசனத்தை,) 𑌵𑍍𑌯𑌤𑌨𑍁𑌤 [வ்யதநுத] - கொடுத்தார். 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 [ஸ்வதந்த்ர:] - பிறரொருவருக்கும் உட்படாத ஸ்வதந்த்ரனை, 𑌅𑌸𑍌 [அஸௌ] - இவன், (இந்த க்ருஷ்ணன்,) 𑌧𑍂𑌰𑍍𑌤𑌃 [தூர்த்த:] - பொல்லாத சேஷ்

டைக்காரராயிருந்தார். ஊஜதாம் [பஜதாம்] - தன்னைப் பஜித்தவர்க்கு, ஸூதஃ [ஸூத:] - தேர்ப்பாகனுய், ஸ்வயம் [ஸ்வயம்] - தானகவே, (தன்னிச்சையால்), ஈஜநி [அஜநி] - ஆனர். ஸ்வபததடிநீஸூநுஸமரே [ஸ்வபததடிநீஸூநுஸமரே] - தன் திருவடியில் உத்பத்தியான கங்கையின் புத்ரரான பீஷ்மருடைய போரில், ஸ்வாம் [ஸ்வாம்] - தன்னுடைய, ப்ரதிஜ்ஞாம் [ப்ரதிஜ்ஞாம்] - ப்ரதிஜ்ஞையை, ஔஜ்ஜத் [ஔஜ்ஜத்] - விட்டார். [மஹத்யோகாத் [மஹத்யோகாத்] - மஹான்களுடைய ஸம்பந்தத்தால், ததயிகம் [தததிகம்] - அதற்கு மேற்பட்ட, மஹிமானம் (மஹிமானம்) - மஹிமையை, வஹதி (வஹதி) - அடைகிறுனென்பது, ப்ராயஃ (ப்ராயஃ) - திண்ணம்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— இதுவரையிலும் பெரியோரை ஆச்ரயிப்பதால் வரும் மஹிமையையும், சுத்தியையும் பேசிவந்தது. ஆச்ரயிக்கப்படுகிறவரைக் காட்டிலும் அதிகமாகக்கூட ஆச்ரயிப்பவருக்கு மஹிமை ஏற்படும் என்றும் சொல்லலாம் என்கிறுர். 'கண்ணிநுண் சிறுத்தாம்பினல் கட்டுண்ட என்னப்பனை' ஸேவிப்பவருக்கும் பஜிப்பவருக்கும் அயத்னமாய் எல்லாக் கர்மபாசங்களும் உடனே அவிழ்ந்து நழுவிப்போம். 'தாமோதரம் பந்தஹாம்' என்பது நிர்வசனச்லோகம். தன் வயிற்றில் கட்டுண்ட தாமோதரனை ஆச்ரயித்து, அவனை த்யானிப்பதால் நம் கர்மபந்தங்கள் முழுவதும் தொலையும். அவன் பத்தனுவது நாம் முக்தராவதற்காக. அவன் பிறப்பது நம் பிறவித் துயரை அறுக்க. "அவன் தூர்த்தனுக ராஸகோஷ்டியில் செய்த கிரீடையெல்லாம் நமக்குப் பரமபாவனம் என்று பெரியோர் பணிக்கின்றனர்" என்பது அதிமானுஷஸ்தவம். ஸ்வதந்த்ரனுன ஈச்வரன் தன் இச்சையினுல் தன் பக்தர்களான பாண்டவர்க்குத் தேர்ப்பாகனுனுன். "ஸாரத்ய, பாரிஷத, தௌத்ய, ஸக்யம்"முதலிய பல பணிவிடைகளையும் சுகர் சேர்த்துப் படித்தார். தான் ஆயுதம் எடேன் என்ற ப்ரதிஜ்ஞயை பீஷ்மயுத்தத்தில் கைவிட்டு அவரை ஸத்யப்ரதிஜ்ஞராக்கினர். பீஷ்மர் ஸ்வயம் பரமபக்தராயிருந்ததுடன், அவர் தாயான கங்கை பெருமாள் திருவடியிலிருந்து பெருகியதீர்த்தம். ஸத்துக்களை ஆச்ரயித்ததால் அவர்கள் தங்கள் பெருமையைக் குறைத்துக் கொண்டும் ஆச்ரிதரைப் பெருமைப்படுத்துவார். (96)

TRADE MARK SREE RAM.

உத்திரவாதமான உயர்ந்த பொருள்கள். ஒரு முறை வாங்கிப் பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

காஷ்மீர் எம்போரியம்

(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது)

22, சுந்தரம் பிள்ளை சந்து, வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

குங்குமப்பூ	காஷ்மீர் குசம்	ப்ளவர்டு டஸ்டு	பற்பொடி, படைமருந்து
பச்சைக்கற்பூரம்	பஞ்சாப் குல்கந்து	கானுஜ் அத்தர் தினுசுகள்	நீலகிரித் தைலம்
நேபாளத்துக் கஸ்தூரி	இஞ்சி முரப்பான்	கோரோஜனை மாத்திரை	வாஸனை சோப்புகள்
கோரோஜனை	நெல்லிக்காய் முரப்பான்	கஸ்தூரி மாத்திரை	விஜயாகரம் ஸ்ரீசூரணம்
அம்பர், முத்து	ஜவ்வாது வத்தி	பன்னீர், தசாங்கம்	சுள்ளங்குடி திருமண்
ஸிலாஜித் (டானிக்)கல்மதம்	சந்தனுதி,அரைக்கீரைத்தைலம்	சந்தன பில்லை	வயிற்று வலிச் சூரணம்
சாலாமிஸிரி	புனுகு, ஜவ்வாது	பெரஹாம்பூர் குங்குமம்	காபூல் பால் பெருங்காயம்
அசல் கொம்புத்தேன்	அரகஜா,ஸ்நோ, பவுடர், சீப்பு	மங்களூர் குங்குமம்	மூளை குளிர்ச்சிக்கு சூர்ணம்

முதலியன.

குறிப்பு:— அதிக உழைப்பினுலும், சிற்றின்ப நுகர்ச்சியினுலும், இரத்த ஓட்டம் குறைந்து, நரம்புகள் தளர்ச்சியுற்று பலஹீனப்பட்டுப் பலவகை நோய்கட்கு ஆட்பட்டுத்தவிக்கும் மனிதர்க்கு அமிர்த சஞ்சீவி போன்றது இயற்கையிலேயே உண்டாகிற அசல் 'ஸிலாஜித்' டானிக் (ஒன்றே) என்பதை எல்லா டாக்டர்களும், வைத்தியர்களும், பிறரும் ஒத்துக்கொள்ளுகின்றனர். ஆதலால் கீழ்க்கண்டமுறைப்படி அதை உபயோகித்து வருவோர் ஆண், பெண் இருபாலரில் எந்த வயதினராயினும் இழந்துபோன பலத்தையும் ஆரோக்யத்தையும் மீளவும் பெறுவார் என்பது உறுதி. எங்களிடம் கிடைக்கும்படியான அசல் ஸிலாஜித் என்னும் (டானிக்கை) படுக்கை சமயத்தில் சுமார் 2-குண்டுமணி எடை எடுத்து அதை ஆழாக்கு காய்ச்சின சூடான பாலுடன் கலக்கி, சிறிது சர்க்கரையும் சேர்த்து சாப்பிட்டுவந்தால் சரீரத்தின் நரம்புகளுக்கும், எலும்பிற்கும் பலத்தைக்கொடுப்பதோடு தாதுவைக் குணப்படுத்தும். நீர் வியாதியையும் நபும்ஸகத் தன்மையையும் நீக்கி சரீரத்திற்கு பலத்தையும் சௌகரியத்தையும் கொடுக்கும். பத்தியமில்லை. ஆண் பெண் இருதாத்தாரும் உபயோகிக்கலாம்.

40-நாளைக்கு உபயோகமுள்ள புட்டி (1-க்கு) விலை ரூபா 1.

தேக ஆரோக்கியம் உங்களது
பிறப்பு உரிமையல்லவா?

மஹாசந்தனாதித் தைலம்.

அபார சக்தி வாய்ந்ததும், மூளைக்குச் சிறந்ததுமான தைலம் இது ஞாபகசக்தி யற்றவர்களுக்கும், மந்த மூளையுள்ளவர்களுக்கும் மனவருத்தம், பார்வை மந்தம், கண் எரிச்சல், தலைநோய், உச்சந்தலையில் தோல் உரிதல், வழுக்கைபோன்ற ஸகல நோய்களுக்கும் மிகச் சிறந்தது ஒரு மாதத்திற்கு உபயோகப்படக்கூடிய 12 அவுன்ஸ் கொண்ட புட்டி விலை ரூ 5

உங்கள் நரம்புகளையும் மூளையையும் பலப்படுத்த ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் என். வி. ஸ்ரீராமா சார்லு அவர்களின் பிரசித்தி பெற்ற திவ்விய ஔஷதங்களை சாப்பிடுங்கள்

"சித்தகல்ப மகரத்வஜம்" (ரிஜிஸ்டர்ட்)

எவ்வளவு கடினமான வியாதியானாலும் தவறாத கண்டிப்பதில் பொன்னைப்போல் போற்றத் தக்கது மூளை வேலை செய்பவர்களுக்கு இது வரப்பிரசாதம் ரத்தத்தைச் சுத்தி செய்வதில் மிகப் பிரசித்தி பெற்றது பூரணவும் குணமடைய 60 மாத்திரை கொண்ட புட்டி விலை ரூ 10

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்,
சென்னை.

ஹெட் ஆபீஸ் 289, எஸ்பிளனேட். } தபால்பெட்டி 151 { 'ரஸாயனசாலை ஸ்ரீராமபவனம்
கிளை ஆபீஸ். 180, மவுண்ட்ரோட். } மதராஸ் { மைலாப்பூர். போன் 3034. தந்தி 'கல்பம்'.

18990

ஸ்ரீ:

உத்திரவாதமான

வைரங்கள் முதலிய ரத்தினங்களால் செய்த பொன், வெள்ளி நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும், பெங்களூர், சேலம், மதுரை, காசி முதலிய பல ஊர் பட்டு, ஜவுளி தினுசுகளும் இங்கு கிடைக்கும்

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:—

V. ராமய்யங்கார்.
கவர்னிங் டைரக்டர்.

ஸ்ரீ ஆண்டாள்
ஜுவெல்லரீஸ் லிமிடெட்.
109, சைனாபஜார் ரோட்,
பைராகிமடம் கோவில் சமீபம்,
மதராஸ்

ஸ்ரீவிஸ் அம்லா கூந்தல் தைலம்.

ஆயுர்வேத முறைப்படி வெகுநாள் உழைத்து கண்டுபிடித்தது

தலை சுற்றல், மூளை மந்தம், கண் எரிச்சல், தலைநோய் முதலியவைகளை எளிதில் கண்டிக்கும்.

ஸ்திரீகளின் வரப்பிரசாதினி. தலைமயிரை வளரச் செய்வதோடு பளபளப்பையும், மிருது தன்மையையும் கொடுக்கும்.

எஸ். விஸ்வநாதம் கம்பெனி, பங்கர்கொடு, மதராஸ்

Registered No. M. 3343

எல். ஜி.

L. G.

இந்த அடையாளமுள்ள

பெருங்காயம்

பார்த்து வாங்குங்கள்.

தங்கப் பதக்கங்கள் பெற்றது.

பவுன் ரூ. 1-14.

மணம், குணம், எல்லாம் உயர்ந்தது.

சௌக்யத்திற்குச் சிறந்தது.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

லால்ஜி கோது அன் கம்பெனி,

சௌகார்பேட்டை, சென்னை.

தலைமை ஆபீஸ்: பம்பாய் (3)

கிளை: கும்பகோணம்.

எல்லோருக்கும்

ஆரோக்கியத்தைக்

கொடுக்கக்கூடியது.

எங்களின் 'ஜே' மிஸ்கி

பெருங்காயம்

எங்கும் கிடைக்கும்.

Printer.— M. K. Parthasarathi Iyengar,
Sri Komalamba Press, Kumbakonam.
Edited and Published at Srirangam by A.V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam